கண் வைத்திய நிபுணர்கள்
சோதித்து எழுதும் (?) கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper
# உதயன்
விலை ரூபா 5-00

OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 26 ஞாயிற்றுக்கிழமை (10 07 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 224

# யாழ்தேவி ரயிலில் குண்டு வெடிப்பு
# 2 பயணிகள் பலி! 10 பேர் காயம்!!

## அநுராதபுரம் ரயில் நிலையத்தில் நேற்று அதிகாலை சம்பவம்

கொழும்பு, ஜூலை 10

கொழும்பு கோட்டையில் இருந்து வவுனியா நோக்கி வந்து கொண்டிருந்த யாழ்தேவி ரயிலில் குண்டு ஒன்று வெடித்ததால் ரயிலில் இருந்தவர்களில் இருவர் கொல்லப்பட்டனர். பத்துப் பேர் வரை காயம் அடைந்தனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 4:40 மணியளவில் அனுராதபுரம் ரயில் நிலையத்தில் நிகழ்ந்தது: ரயில் தரித்து நின்ற சமயமே குண்டு வெடித்தது.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள், காயம் அடைந்தவர்கள் பற்றிய விவரங்கள் கிடைக்கவில்லை. கடுமையான காயம் அடைந்தவர்கள் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இச்சம்பவத்தை அடுத்து கொழும்பு கோட்டை உட்பட நாட்டின் பிரதான ரயில் நிலையங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டதாக ரயில்வேக் கட்டுப்பாட்டு நிலையம் அறிவித்தது.

தேவை ஏற்படின் ஆயுதப்படையினரின் உதவியை ரயில்வே திணைக்களம் பெற்றுக்கொள்ளும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யார் இந்த குண்டை வைத்தார்கள் என்பது உடனடியாகத் தெரியவில்லை என்றும்—

படையினர் வழமை போல விடுதலைப் புலிகளைக் குற்றஞ்சாட்டி உள்ளனர் என்றும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (இ-எ-ஐ-க-4)

## பஞ்சாப் ஆளுநர் விமான விபத்தில் மரணம்

புதுடில்லி, ஜூலை 10

பஞ்சாப் மாநிலத்தின் ஆளுநர் சுரேந்திர நாத்தும் அவரது உறவினர்களும் பயணம் செய்து கொண்டிருந்த விமானம் விழுந்து நொறுங்கியதில் அவர்கள் அனைவரும் உயிரிழந்தனர்.

## கிழக்கு மீனவர் மீது படையினர் தாக்கு

மட்டக்களப்பில் இரால், பறங்கிமடுவில் கடற்றொழிலாளர்களை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தாக்கித் துன்புறுத்துகின்றனர் என அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இரவில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களே இவ்வாறு தாக்குதல்களுக்கு உள்ளாகின்றனர். [இ-எ]

## வடகொரிய ஜனாதிபதி கிம் இல் சுங் காலமானார்

பியொங்யாங், ஜூலை 10

வடகொரியா ஜனாதிபதி கிம் இல் சுங் நேற்று முன்தினம் பியொங்யாங் நகரில் மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 82

அமைதியைப் பராமரிக்கும் படியும் காலஞ்சென்ற தலைவரின் புரட்சிப் போராட்டத்தின் இலட்சியங்களைப் பூர்த்தி செய்வதில் ஒத்துழைக்கும் படியும் வட கொரியா வானொலி அறிவிப்பு ஒன்று மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

கிம் இல் சுங்கின் இறுதிச் சடங்குகள் இம் மாதம் 17 ஆம் திகதி நடைபெறும். ஆனால் வெளிநாட்டவர்கள் எவரும் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிம் இல் சுங் இம்மாதம் 25 ஆம் திகதி பியொங்யாங்கில் தென் கொரிய அதிபர் கிம்யொங் சாமுடன் முதன் முறையாக உச்சநிலைக் கூட்டம் ஒன்றை நடத்தவிருந்தார்.

சுமார் நாற்பதாண்டுக் காலம் வட கொரியாவை இரும்புக் கரத்துடன் ஆண்டு வந்தார் கிம் இல் சுங்.

அவருடைய மூத்த மகன் கிம் யொங்கில் அடுத்தபடியாக அதிபர் பதவியை ஏற்கவிருக்கிறார்.

தென்கொரிய அதிபர் கிம் யொங் சாம் நேற்று முன்தினம் பிற்பகல் வட கொரிய அதிபரின் மரணம் பற்றிய செய்தியைக் கேட்டவுடன் அவசரக் கூட்டம் ஒன்றை அழைத்தார்.

பாதுகாப்பு அமைச்சரையும் அழைத்து எந்தவிதமான நெருக்கடி நிலைக்கும் தயாராக இருக்கும்படி உத்தரவிட்டார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## சோமவன்ச அமரசிங்க நாடு திரும்பி விட்டார்
### அரச சார்புப் பத்திரிகை தகவல்

கொழும்பு, ஜூலை 10

ஜே. வி. பி தலைவர் சோமவன்ச அமரசிங்க கடந்த புதன்கிழமை நாடுதிரும்பி விட்டார் என்று கட்டுநாயக்கா விமான நிலைய வட்டாரங்களை மேற்கோள்காட்டி அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள டெய்லி நியூஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஜே. வி. பி. தடைசெய்யப் பட்ட கட்சி அல்ல என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்திருப்பதாகவும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

ரோஹண விஜேவீர தலைமையில் இருந்த ஜே. வி. பி. அரசியல் குழு உறுப்பினர்களில் இன்று உயிருடன் உள்ள ஒரே ஒரு உறுப்பினர் சோமவன்ஸ அமரசிங்கா ஆவார். ஏனைய 13 உறுப்பினர்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் கொல்லப்பட்டு விட்டனர்.

இதனிடையில்—

சோமவன்ஸ அமரசிங்க நாடுதிரும்பி அரசியலில் ஈடுபடும் உரிமை அவருக்கு உண்டு. அவரைக்கைது செய்து தடுத்து வைக்கும்படி அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்கவில்லை என்று அதிகாரபூர்வ அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-எ)

## கொள்ளுப்பிட்டியில் கைக்குண்டு வெடித்தது!
### தலைநகர் கொழும்பில் பரபரப்பு

கொழும்பு ஜூலை 10

கொள்ளுப்பிட்டியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கைக்குண்டு ஒன்று வெடித்ததையடுத்து கொழும்பு நகரில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது

கொள்ளுப்பிட்டிப் பொலீஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து விசாரித்ததில்—

கைக்குண்டு ஒன்றை ஒரு நபர் கொண்டு சென்றபோது அது தற்செயலாக வெடித்ததாகவும்—

கைக்குண்டைக் கொண்டு சென்றவரும் கடும் காயங்களுக்குள்ளானதாகவும்— தெரியவந்தது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பவர் எட்டியாந்தோட்டையைச் சேர்ந்த ரவிராஜ் என இனங்காணப் பட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள நிறுவனம் ஒன்றில் சிற்றூழியராகக் கடமையாற்றும் இவரை பொலீஸார் விசாரணை செய்து வருகின்றனர். (இ-ஐ-3)

### முச்சந்தி முரளி



தெற்கு அரசியல் வெறும் கடைச்சரக்காக மாறி வருகுது பாருங்கோ......!

## தலைமறைவான ஜே. வி. பியினர் பலர் மீண்டும் வெளிப்படலாம்!

கொழும்பு, ஜூலை 10

ஜே. வி. பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க நாடு திரும்ப அனுமதிக்கப்பட்டிருப்பதால் உயிருக்குப் பயந்து தலைமறைவான ஜே. வி. பி. யினர் பலர் மீண்டும் வெளிப்பட்டு அரசியலில் ஈடுபடலாம் என்று கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

சோமவன்ஸ அமரசிங்க முதலில் கடந்த செவ்வாய்க்கிழமையே நாடு திரும்புவார் என்று தெரிவிக்கப்பட்டது

அன்றைய தினம் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பொலீஸாரும் புலனாய்வு அதிகாரிகளும் குழுமியிருந்தனர் என்றும்—

எதற்காக அவர்கள் அங்கு சென்றிருந்தனர் என்று கேட்டதற்கு, ஜே.வி.பி. தலைவர் நாடு திரும்புவதை பார்ப்பதற்காக அங்கு சென்றிருந்தனர் என்று சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்றும் 'ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

அவரைக் கைது செய்து தடுத்து வைக்கும்படி எமக்கு உத்தரவிடப்படவில்லை என்று அவர் கூறினார் என்றும் மேலும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

### சிப்பாய் பலி

கொழும்பு, ஜூலை 10

மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடி— பதுளை வீதியில் உள்ள மாரப்பாலம் இராணுவ முகாமுக்கு தண்ணீர் ஏற்றிச் சென்ற பவுஸர் ஒன்று புரண்டது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

## அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் "மகரயாழ் விருது" இம்முறை அமரர் துரைராசாவுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 10

அகில இலங்கை கம்பன் கழகம் தனது 1994 ஆம் ஆண்டுக்கான "மகர யாழ் விருதை" யாழ் பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அமரர் பேராசிரியர் அழகையா துரைராசாவுக்கு மறைவுக்குப் பிந்திய விருதாக வழங்கிக் கௌரவிக்கவுள்ளது

பேராசிரியர் துரைராசா கல்வித்துறையில் ஆற்றிய தொண்டுக்காக இவ்விருது வழங்கப்படுகிறது

மகரயாழ் விருதுக்குரியவராக அமரர் பேராசிரியர் துரைராசா தெரிவு செய்யப்பட்டமை குறித்து கம்பன் கோட்டத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது



தேர்வுக்கான அறிஞர் குழுவின் சார்பில் திரு க.சிவராமலிங்கமும், பராசிரியர் அ. சண்முகதாஸும் ஒப்பமிட்டிருந்த, விருதுக்குரியவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நியமனம் நிராகரிப்பு
# ஸ்ரீமாவோவின் இல்லம் முன் பலர் கூடிநின்று ஆட்சேபம்

கொழும்பு, ஜூலை 10

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர்களாகப் போட்டியிட முன்வந்த பல பிரமுகர்களின் பெயர்கள் நிராகரிக்கப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்து நூற்றுக்கணக்கானவர்கள் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் றோஸ்மீட் இல்லத்துக்கு முன்பாக நேற்றுக் கூடி இருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் அநேகமானோர் மொனராகலை, அம்பாந்தோட்டை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

கூடியிருந்தவர்களின் பிரதிநிதிகள் சிலரை தமது இல்லத்துக்குள் அழைத்து திருமதி பண்டாரநாயக்கா பேச்சு நடத்தினார்.

கூடியிருந்தவர்களில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஸவும் ஒருவர் என்று "லங்காதீப" தெரிவித்தது. (இ-ஐ-6)

# செல்லச்சாமி சுதந்திரக் கட்சியில்

கொழும்பு, ஜூலை 10

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் சேர்ந்துள்ளார்.

நேற்று நண்பகல் அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டார் என்றும் —

பொதுத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளராக கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக அவர் நாளை தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்வார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கருத்து வேற்றுமை காரணமாக இ.தொ.காவின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்தும் —

கட்சியின் உறுப்புரிமையில் இருந்தும் செல்லச்சாமி சமீபத்தில் நீக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. [இ-ஐ]

## நயினாதீவுக்கு சென்று திரும்பிய போது
## சூடுபட்டு படுகாயமடைந்த நெடுந்தீவுவாசிகள் பலாலியில்

யாழ்ப்பாணம், ஜூலை 10

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில் தேர்த்திருவிழாவுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய சமயம் —

ஸ்ரீலங்காப் படையினரின் துப்பாக்கிச் சூட்டிக்கு இலக்காகி காயமடைந்த எண்மரில் இருவர் பலாலி படை முகாமில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறு காயங்களுக்கு உள்ளான மற்றைய இருவரும் நெடுந்தீவு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பண்ணையில் இருந்து விசைப் படகில் வந்து கடற்படையினரே நெடுந்தீவைச் சேர்ந்த மக்கள் மீது — நெடுந்தீவு கரைக்குச் சமீபமாக வைத்து — துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் நெடுந்தீவு வாசி ஒருவர் உயிரிழந்தார் என்பது தெரிந்ததே. (ஒ-111

## வீட்டில் தங்கியவரை பதிவு செய்யத் தவறினார்
### தமிழருக்கு அபராதமும் சிறையும்

பொலீஸில் பதிவு செய்யாமல் ஒருவரை தனது வீட்டில் தங்க அனுமதித்த தமிழர் ஒருவருக்கு 500 ரூபா குற்றப்பணமும் —

ஐந்து வருட [illegible] வைக்கப்பட்ட 6 மாத கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

[illegible] கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி [illegible]

## ஷெல் வெடித்து இளைஞர் காயம்

தென்மராட்சி, ஜூலை 10

கவனிப்பாரற்ற நிலையில் பற்றைக்குள் கிடந்த ஷெல் ஒன்றை எடுத்து அருகில் நின்ற தென்னை மரத்தில் குத்திப் பரிசோதித்த இளைஞர் ஒருவர் அந்த ஷெல் வெடித்ததில் படுகாயமடைந்தார்.

கடந்த புதனன்று புலோப்பளைப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

புலோப்பளையைச் சேர்ந்த இராமச்சந்திரன் சுதாகரன் (17) என்ற இளைஞரே இவ்வாறு காயமடைந்தார்.

## போலிக் கடவுச்சீட்டை பயன்படுத்தினாரா?

கொழும்பு, ஜூலை 10

கடந்த புதன்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து ரகசியமாக வெளியேறுவதற்கு சோமவன்ஸ அமரசிங்க போலிக்கடவுச் சீட்டைப் பயன்படுத்தி இருக்கலாம் என்று நம்பப்படுகிறது

சோமவன்ஸ அமரசிங்க துபாய் - லண்டன் வழியாக பாரிஸில் இருந்து கடந்த புதன்கிழமை பிற்பகல் 1 30 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார் என்று சில வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அவர் பயணம் செய்த விமானம் இரண்டரை மணித்தியாலம் தாமதமாகவே கட்டுநாயக்காவை வந்தடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## நவசமசமாஜக்கட்சி அழைப்பு விடுத்திருந்தது

கொழும்பு, ஜூலை 10

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக புதிய அரசியல் முன்னணி ஒன்றை அமைக்க கொழும்புதிரும்பும்படி தான் சோமவன்ஸ அமரசிங்கவுக்கு அழைப்பு விடுத்ததாக நவசம சமாஜக் கட்சிப் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணரத்ன தெரிவித்தார்.

ஜே. வி. பி. யின் இன்னொரு அமைப்பான தேசிய மீட்பு முன்னணியின் பெயரில் நவசம சமாஜக் கட்சி, முஸ்லிம் முற்போக்கு முன்னணி, ஆரிய புலகொடவின் ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி ஆகியன எதிர்வரும் தேர்தலில் போட்டியிட விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## படையினர் - புலிகள் திருமலையில் மோதல்
### சிப்பாய் ஒருவர் பலி

யாழ்ப்பாணம், ஜூலை 10

திருமலை மாவட்டம் கும்புறுப்பிட்டி என்னுமிடத்தில் கடந்த புதன்கிழமை படையினர் புலிகளுடன் இடம்பெற்ற மோதல் ஒன்றில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்வாய், மாராம்புலம்

# அருள்மிகு மாணிக்கப்பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகச் சிறப்பு மலர்

10-07-1994

## இன்றைய நிகழ்ச்சிகள்

8-00 மணிக்கு யாத்திரதானம், முகூர்த்ததானம்
9-00 மணிக்கு தூபி அபிஷேகம்
10-00 மணிக்கு மகா கும்பாபிஷேகம்
11-00 மணிக்கு மகா அபிஷேகம்
12-00 மணிக்கு ஆசியுரை

சுவாமி சித்ரூபானந்தா
(ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் பருத்தித்துறை)

1-00 மணிக்கு சிறப்புச்சொற்பொழிவு
கம்பவாரிதி இ. ஜெயராஜ்
(அமைப்பாளர், அகில இலங்கை கம்பன் கழகம்)


மாணிக்கப் பிள்ளையார் தாள் தொழுது பணிவோம்

**வேல் சவுண் சேவிஸ்**
பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

**திரு வீடியோ சென்ரர்**
மூத்தவிநாயகர் கோவிலடி, நவிண்டில் நெல்லியடி

**சண்முகம் பலசரக்கு மாளிகை**
சமரபாகு. வல்வெட்டித்துறை

**குமுதினி ஸ்ரோர்ஸ்**
இல. 4, நவீன சந்தை. நெல்லியடி

**விநாயகர் பலசரக்கு வியாபாரம்**
இல. 6. நவீன சந்தை. நெல்லியடி.

**கிருஷ்ணானந்தன் பலசரக்குக் கடை**
இல. 1, நவீன சந்தை, நெல்லியடி.


## அடியவர் கொடுவினை தீர்த்து அருள் சுரக்கும் விநாயகன்



ஈழநாட்டின் பருத்தித்துறை மருவிய அல்வாய் என்னும் சிற்றூரிலே இற்றைக்குப் பல ஆண்டுகளுக்கு முன் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் மாணிக்கப் பிள்ளையார்ப் பெருமானின் அளப்பரும் கருணையினாலும், அடியார்களின் உதவிகளினாலும் இன்று ஆனி மாதம் 26 ஆம் திகதி (10 - 07 - 1994) ஞாயிற்றுக்கிழமை சிவ, ஸ்ரீ. பொ. வரதராஜக்குருக்கள் தலைமையில் பஞ்சதள பக்ஷ பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெறும் திருவருளை நினைந்து உவகை கொள்கின்றோம்.

இவ்வாலயம் தோன்றுவதற்குச் சிறப்பான வரலாறு ஒன்று உண்டு. இக்கிராமத்து மக்கள் தொன்று தொட்டு விநாயகர் வழிபாட்டில் மிகுந்த பற்றுள்ளவர்கள். பிள்ளையார் கதை விரதம், இவர்களது பக்தி மயப் பாட்டை எடுத்துக் காட்டியதோடு. பிள்ளையாரே தோன்றித் தோன்றிப் பட்ட புளியமரத்தைத் தளிர்க்கச் செய்து காட்சி கொடுத்தமையினால் பட்டபுளி தழைக்கச் செய்த மாணிக்கப்பிள்ளையார் என எல்லோராலும் அழைக்கப்படலானார்.

மேலும் இக்கோயிலில் ஆவாகனம் செய்யும் விக்கிரகம் இந்தியாவிலிருந்து எடுத்து வரும் போது, விக்கிரகம் மறைக்கப்பட்டதாகவும் கொண்டு வந்தவர் பிடிபட்டு கொழும்புச் சிறையில் இருந்ததாகவும், அறிந்துள்ளோம். அவ்விக்கிரகமே இன்றும் பிரதிஷ்டை செய்யப்படுவதை எண்ணி அடியார்கள் ஆனந்தப் பரவசமடைகின்றார்கள்.

மேலும் இவரோடு சிறையில் இருந்த பிராமணோத்தமர் ஒருவர் இவர் எப்போதும் மாறாம்புலம் மாறாம்புலம் என்று வணங்குவதை அவதானித்து மாறாம்புலம் பெருமான் மீது பதிகம் பாடினார்; அப்பதிகம் பாடியதும் இருவரும் சிறைமீண்டனர் என்றும் சிறையிலிருந்து இப்பதிக்கு வந்து வணங்கிப் பின் தனது ஊருக்குச் சென்றதாகவும் கர்ணபரம்பரைக் கதையாகக்கூறி வருவதிலிருந்து இக்கோயிலின் சிறப்பு உணரத்தக்கது.

இவ்வாலயத்தில் கோயில் கொண்டிருக்கும் விநாயகர் தம்மை வழிபடும் அடியவர்களின் விக்கினங்களை தீர்த்து மேலான சிறப்புக்களை வாரி வழங்கும் வள்ளலாகவும் கருணை வடிவானவராகவும் வீற்றிருப்பதை அடியவர்கள் எளிதில் மறந்து விடமாட்டார்கள்.

ஆகவே இக்கும்பாபிஷேக நன்னாளிலே அடியார்கள் அனைவரும் பக்தியோடு எல்லாம் வல்ல மாறாம்புலம் மாணிக்கப்பிள்ளையாரை மனம் மொழி மெய்யினால் வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெற்று நித்திய பேரின்பத்தைப் பெறுவோமாக. ★

மாறாம்புலம் மாணிக்கப்பிள்ளையார்
(ஆலய பரிபாலன சபை)

அருமேவு வெள்ளெருக் கறுகுநதி கொன்றையோ டமலர்தரு புதல்வன்வாழி
ஆதிமக மாகவி யாணிதரு புதல்வனாய் அருளுமுக்கண்ணன் வாழி
திருமேவு மால்மருகன் வாழியிக் கவிகளைச் செப்புவோர் தாமும் வாழி
சீரான அவலப்ப நெற்பொரியோ டெட்பயறு சேரவே சர்க்கரையுடன்
மருமேவு மருமலர்கள் முப்பழம் மோதகம் வழங்கு பூசுரர்கள் வழி
மனமதனில் நினைவுற்ற வரமருளு மைங்கரனை வாழ்த்துமடியார்கள் வாழி
தருமேவு வனசமொடு கன்னல்விளை சாலிபல தழைத்துலவு மாறாம்புலந்
தாமேவி யருளுதவு மாணிக்கப் பிள்ளை பொற் சரணமது வாழி வாழி


மாணிக்கப் பிள்ளையார் தாள் தொழுது பணிவோம்

**சர்வானந்தா வாணிபம்**
பிரதான வீதி. நெல்லியடி.

**குறிஞ்சி தையல் அகம்**
(முன்னைய சிமார்ட்)
பிரதான வீதி. நெல்லியடி.

**சரவணாஸ்**
பிரதான வீதி. நெல்லியடி.

**சந்துஜன்ஸ்**
ம. ம. வி. வீதி, நெல்லியடி.

**சக்திவேல் அழகு சாதனம்**
உள் மார்க்கட். பருத்தித்துறை.

**அன்ரன் பெயின்ரோர்ஸ்**
பிரதான வீதி, பருத்தித்துறை.

**துவாரகா வர்த்தக நிலையம்**
மாறாம்புலம், அல்வாய்.

**ராஜீ ஸ்ரோர்ஸ்**
குமுதெணி, அல்வாய்.

**கண்ணன் பலசரக்கு வியாபாரம்**
மாறாம்புலம், அல்வாய்.

**ரவி ஸ்ரோர்ஸ்**
திக்கம் சந்தை. அல்வாய்.

**சின்னண்ணா**
துவிச்சக்கர வண்டி திருத்தும் கடை.
அல்வாய் வடக்கு, அல்வாய்.

**பாரதி சனசமூக சேவா நிலையம்**
மாறாம் புலம், அல்வாய்.


## உணவுக்கும் மருத்துவத்துக்கும் பயன் படும் முருங்கை மரம்

சத்துணவுப் பயனும், மருத்துவ பயனும் கொண்டு வேர் முதல் நுனி வரை பயன் தரும் முருங்கை எமது பிரதேசத்துக்கு உரியது. மொரிங் கேசியே என்ற தாவர குடும்பத்தைச் சேர்ந்த மொங்கா ஒலிபரா என்ற தாவரவியல் பெயரை கொண்டது முருங்கையாகும்.

முருங்கையில் யாழ்ப்பாண முருங்கை, சாவகச்சேரி முருங்கை, நாட்டு முருங்கை, காட்டு முருங்கை, செடி

### அபிவிருத்தி

முருங்கை என பல வர்க்கங்கள், இருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்ட முருங்கை சாகுபடி என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உண்மையில் 1986 ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகளால் செடி முருங்கை, எமது பிரதேசத்துக்கு அறிமுகம் செய்யப்பட்டது. இன்றும் இவ் முருங்கை சில இடங்களில் உள்ளது. இது புலி முருங்கை என தற்போது கூறப்படுகின்றது. குறிப்பிடப்படுகின்றன.

எமது பிரதேசத்தில் இரண்டு வகை முருங்கை வர்க்கம் பல்லாண்டு காலமாக பிரபல்யமாக உள்ளன.

★ ஒலாந்தா இனம் – இது ஒல்லாந்தரால் கொண்டுவரப்பட்டதாக கர்ண பரம்பரை கதைகள் உண்டு. ஒலாந்தா என்பதும் ஒல்லாந்த சொல்லாகும். இது சராசரி 3' நீளமானது. தோல் நாரற்ற தன்மை குறைவு. சதைப் பகுதி நுங்கு போல உள்ளது. சமையலுக்கு சுவையானது. நறுமணம் கொண்டது. சராசரி ஒரு மரம் வருடம் ஒன்றுக்கு 400 காய்கள் தரும்.

★ கப்பல் முருங்கை – இது $1\frac{1}{2}$–2' நீளமான கட்டை காய்களை தரும், காய்கள் மொத்தமானவை. சமைக்க உருசியானவை, சராசரி ஆயிரம் காய்கள் வரை வருடத்தில் காய்க்கும்.

உண்மையில் இந்த இரண்டு வர்க்கங்களும் மற்றையவற்றிலும் பார்க்க நறுமணமும் ருசியும் கொண்டவை.

### முக்கியத்துவம்

முருங்கைக்காய், இலை, பூ என்பன கறி சமைக்க பயன்படுவதுடன் இலை, பட்டை ஆகிய மருத்துவத்துக்கும் பயன்படுகின்றன.

முருங்கை மரத்தின் வேரில் உள்ள அல்கலைட்டுக்கள் காரணமாக இவ்வேர் குழந்தைகளின் பேதி, இருமல், காய்ச்சல் போன்ற நோய்கள் தீர பயன்படுகின்றன. முருங்கைப்பட்டையிலிருந்து பல தைலங்கள் செய்யப்படுகின்றன. இந்த சாறு உலோகங்களை பஸ்பமாக்க பயன்படுகின்றன. முருங்கைப் பிசின் வேகியங்கள் செய்யப்பயன்படுகின்றது.

கீரை வறை, பிரட்டல், சொதி வைத்து சாப்பிடும் வழக்கம் உண்டு. இலை நால் நடை உணவாகவும் உள்ளது. வெண்ணெய் உருக்கும்போது முருங்கை இலையை போட்டால் நறுமணத்தை வெளியேற விடாமல் தடுக்கின்றது. முருங்கை இலையை நெய்யில் வறுத்து உண்ணும் வழக்கம் இன்றும் உண்டு.

காய், சுவையான கறிவகை செய்வதற்கும் குளோபுலின், புரோலாமின் என்ற இரு இன்றியமையாத அமினோ அமிலங்கள் உள்ளன. முருங்கைக்காயின் சுவைக்காகவே இதனை விரும்புகின்றனர்.

விதை நீக்கட்டியை போல் வறுத்து உண்ணப்படுகின்றது. விதைகளில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய் சமையலுக்கும், வாதநோயை குணப்படுத்தவும் கடிகாரம் போன்ற நுண்ணிய இயந்திரங்களுக்கு இயந்திர எண்ணெயாகவும் பயன்படுகின்றது. அத்துடன் இவ்வெண்ணெயில் இருந்து சோப்பு நறுமணப் பொருள்கள் செய்யப்படுவதுடன், நறுமணத்தை வெளிவிடாமல் வைத்திருக்கும் தன்மை காரணமாக உணவு பண்டங்களுக்கும் இது பயன்படுகின்றது.

### விருத்தி செய்தல்

முருங்கையை விதை மூலமும், துண்டம் மூலமும் விருத்தி செய்ய முடியும். செடி முருங்கை விதை மூலம் விருத்தி செய்யப்படலாம் மற்றவை துண்டம் மூலம் நடப்படலாம். எல்லா வகையான தரையிலும் வளரக்கூடியது. ஆடி ஆவணி மாதங்கள் உகந்த நடுகைக்காலமாகும் 3மீ 3மீ. இடைவெளியில் கூடுதலாக பயிரிடும் போது நடலாம்.

### முடிவுரை

இது ஒரு மருந்தடிக்காத மரக்கறி, நட்டால் நிச்சயம் பயன்தரக்கூடியது. நினைத்தவுடன் இலையையாவது பிடுங்கி சமைக்கலாம். இதற்கு எந்தவித பராமரிப்பும் தேவையில்லை ஆகவே முருங்கையை பெருமளவில் அபிவிருத்தி செய்வோம்.

முருங்கைக்காயின் சத்து பெறுமானம் (100 கிராம் உண்ணக்கூடிய பகுதியில்)
சத்தி 26 கி. கலோரி
புரதம் 2.5 கிராம்
கொழுப்பு 0.1 கிராம்
மாப்பொருள் 3 7 கிராம்
கல்சியம் 30 மி கிராம்
பொசுபரசு 110 மி. கிராம்
இரும்பு 5.3 மி கிராம்
உயிர்ச்சத்து 5மைக் கிராம்
தியாமின் 60 மைக் கிராம்
நயாசின் 0.8 மி. கிராம்
உயிர்சத்து 120 மி. கிராம்

ஆதாரம்: உணவு தேவையுட உற்பத்தி இலக்கும் தமிழீழ ஆய்வு நிறுவன வெளியீடு.

தகவல்: தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ★

## அன்பை, அறவழியை வளர்த்த தமிழ் அறிஞர் பண்டிதமணி

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் 95 ஆவது பிறந்ததின நினைவுவிழா இன்று கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

பண்டிதமணி கணபதிப்பிள்ளை பற்றி பல கோணங்களில் நின்று பலர் பார்க்கும் இந்த நேரத்தில் எனது அறிவிற் கேற்ப என்பார்வையில் அவரை காண முனைகிறேன்.

சிறந்த எழுத்தாளராகவும் சைவத் தமிழ் பேரறிஞராகவும், ஆராய்ச்சியாளராகவும், பேராசிரியராகவும், விளங்கிய பண்டிதமணி அவர்களை என் பார்வையில் அவரை ஒரு சமூக சேவையாளராக, மக்களை நல்வழிப்படுத்தும் தொண்டனாக, ஊதியம் பெறாது சமூக முன்னேற்றத்திற்கு அரும்பாடு பட்ட ஒருமகானாக, சமூக சேவையில் சிறந்தவனாக, அவரை நாம் காண முடிகிறது.

பண்டிதமணி அவர்கள் மக்களுக்கு தமிழை போதித்துள்ளார். இலக்கியம் இலக்கணம், அரசியல், கலாசாரம், சமயம் என்பவற்றில் நுணுக்கங்கள் பற்றி பல சபைகளில் பேசியுள்ளார். சொற்பொழிவில் தமக்கென ஒரு பாணியை உண்டாக்கி சொற்பொழிவினால் மக்கள் மனதை மாற்றி அவர்களை நல்வாழ்வு வாழவும், ஆன்ம ஈடேற்ற முன்னேற்றத்துக்காவும் பாடுபட்டார். இது ஒரு சமுதாய முன்னேற்றச் சேவையாகும்.

[illegible] கோயில்கள், வேறு சங்கங்கள், சபைகள் ஆகியவற்றிலும் சொற்பொழிவு ஆற்றி கல்வித் தொண்டாற்றி, கல்வி மூலமாக மனித முன்னேற்றத்துக்கு மக்களை இட்டுச் சென்றார். இது மக்கள் சேவையாகும்.

பண்டிதமணி அவர்கள் அன்றிருந்த வாலிபர் இயக்கங்கள் ஆசிரியதிராவிடர்பாஷாவிருத்தி சங்கம், சைவவிருத்தி சங்கம், சைவபரிபாலன சபை, [illegible] நிலையம், தமிழ் ஆசிரியர் சங்கம், இந்து வாலிபர் சங்கம் யாழ். வாலிபர் காங்கிரஸ் என்பன போன்ற சங்கங்களில் பணிகள் ஆற்றி அதன் மூலமாக தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும், பெருமளி வழங்கி அறிவை வளர்த்தார் அன்பை வளர்த்தார். அறவழியை வளர்த்தார், இது ஒரு சமூகசேவையாகும்.

[illegible] தோப்பிலும் வடலி அடைப்பிலும், தோட்டங்கள் [illegible]விலும் தனது பன்னசாலையிலும், சைவத்தமிழ் மணத்தை பரப்பியது ஒரு சமூக சேவையாக கருதலாம். கல்வி முன்னேற்றத்தினால் தான் ஒரு நாடு முன்னேறும். கல்வியை தமிழ் மூலம் பரப்புவதன் காரணமாக படித்தவர் மாத்திரமல்ல பாமரர் கடித்தன மக்கள் ஆகியோர் கல்வியில் மேம்பட்டனர் இதனால் நாடு முன்னேற்றம் அடைந்தது. அவர்களின் எண்ணங்கள் நடையுடை, வாழ்க்கை முறை யாவும் முன்னேறின. மனிதன் முன்னேறினான், அதற்கு பண்டிதமணி அடியெடுத்துக் கொடுத்தார்.

காவிய பாடசாலை ஸ்தாபித்து சமஸ்கிருத வகுப்பையும், சிங்கள வகுப்பையும் நடத்தி இக் காவிய பாடசாலை மூலமாக பல கல்வியாளரை உருவாக்கினார்.

அவர்கள்தான் தேவதூதர்கள். மக்களை நல்வழிப்படுத்தும் இயக்கமாக இது உருப்பெற்றது. தமிழ் மொழியால் பல்வகை மக்களை ஒன்று சேர்த்தார்.

தாம் செய்யும் எத்தொண்டையும் வெளிப்படுத்தாத குணமும், தன்னைப்பற்றி, பெரிதாக எண்ணாத எண்ணமும், மற்றையோருக்கு தான் கற்றவற்றை பகிர்ந்து கொடுக்கும் தர்ம சிந்தனையையும் அவர் பால் குடிகொண்டிருந்தன. கல்வி ஒரு செல்வம், இக்கல்வி கொடுக்கக் கொடுக்கப் பெருகி வரும். கல்வியை அள்ளிக் கொடுத்து கல்வியில் செல்வமானோர் பலர் சொல்லை செல்வமாக்கி அச் செல்வத்தை பகிர்ந்தளித்தார் பண்டிதர் அவர்கள். பலர் இதனால் வாழ்ந்தனர். பலரை வாழ வைத்தார் பண்டிதமணி அவர்கள்.



பண்டிதமணி

— பேராசிரியர் வி. க. கே கணேசலிங்கம் —
(யாழ் பல்கலைக்கழகம்)

## இன்று

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 15ஆவது ஆண்டு விழாவும் புதிய நிர்வாக பதவியேற்பு வைபவமும் இன்று ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள லயன் டாக்டர் தா. சிவபாதத்தின் இல்லத்தில் நடைபெறும். (ஓ-1[7)

★ ★ ★

உடுவில்கிழக்கு கடவுள் சந்நிதியில் இன்று ஞாயிறுகாலை 9மணியளவில் வைத்திய கலாநிதி திரு.வ.சின்னப்புவின் அத்வைத வேதாந்த சொற்பொழிவு நடைபெறும். [ஓ]

★ ★ ★

தமிழ் சோதிடர் ஒன்றியத்தின் வாராந்த இலவசசோதிட வகுப்பும், சோதிட ஆய்வரங்கும் இன்று ஞாயிறு மாலை 3 மணிக்கு தமிழ் எழுத்தாளர் பணிமனையில் நடைபெறும்.

★ ★ ★

தென்புலோலி காந்தியூர் சனசமூக நிலையம் நடத்தும் இலவசக் கல்வி நிலைய மாணவர்களுக்கான இல்ல விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிறு நடைபெறும்.

★ ★ ★

சர்வதேச கூட்டுறவாளர் தின விழாவை முன்னிட்டு யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையால் நடத்தப்படும் போட்டிகளில்—

இன்று ஞாயிற்றுக்கிழமை பாடசாலை மாணவர்களுக்கான ஆரம்பப் பிரிவு, கீழ் பிரிவு, மத்திய பிரிவு கட்டுரைப் போட்டிகள் காலை 9 மணிமுதலும், பேச்சுப் போட்டிகள் காலை 10 மணி முதலும் யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறும்.

## நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 10 கோப்பாய்க் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சுத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறும் கூட்டத்தில் சீருடை விநியோகம் தொடர்பாகவும் ஆராயப்படும் என அறிவிக்கப்படுகிறது. [ஓ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கோலாவில் ஐ. நா. தலையீடும், தீர்வுத் திணிப்பும்

# 'யுனிட்டா' விடுதலை இயக்கத்துக்குப் பெரும் சவால்!

கடந்த 20 வருடங்களாக நடைபெற்றுவரும் அங்கோலா உள்நாட்டு யுத்தத்தில் புதிய திருப்பம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது.

அங்கோலாப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான திட்டம் ஒன்று அங்கோலாவில் தற்போது ஆட்சியில் உள்ள மார்க்ஸிய அரசாங்கத்தினதும்—

மார்க்ஸிய அரசுக்கு எதிராகப் போராடி வரும் வலதுசாரி யுனிட்டா இயக்கத்தினதும் அங்கீகாரத்தைப் பெறுவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்வுத் திட்டத்தை அங்கோலாவின் மார்க்ஸிச அரசின் ஜனாதிபதி யோஸ் எட்வார்டோடொஸ் சான்றோஸ் (Jose Eduardodos Santos) ஏற்கனவே ஏற்றுக் கொண்டுள்ளார்.

யுனிட்டா இயக்கத் தலைவர் ஜோனஸ் சாவிம்பி (Jonas Savimbi) ஏற்கமறுத்து வருகிறார்.

### ஐ. நா. நிர்ப்பந்தம்

கடந்த ஜூன் 30 ஆம் திகதி கூடிய ஐ. நா. பாதுகாப்புச் சபை, இந்த தீர்வுத் திட்

**வெளி உலகம்**

டத்தை ஏற்பதற்கு யுனிட்டா இயக்கத்துக்கு ஒரு மாதகால அவகாசம் வழங்கி உள்ளது.

இம்மாதம் 31ஆம் திகதிக்குள் தனது தீர்வுத் திட்டத்தை ஏற்காவிட்டால் யுனிட்டா இயக்கத்துக்கு எதிராக மேலும் தடைகளை (Sanctions) அறிவிக்கப்போவதாக பாதுகாப்புச்சபை பயமுறுத்தல் விடுத்திருக்கிறது.

இது சம்பந்தமான வாக்கெடுப்பு கடந்த 30ஆம் திகதி பாதுகாப்புச் சபையில் நடத்தப்பட்டபோது பாதுகாப்புச் சபையின் மொத்தம் 15 நிரந்தர உறுப்பு நாடுகளும் ஆதரவாக வாக்களித்திருந்தன. ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடந்த ஏழு மாதங்களாக சாம்பியாவின் தலைநகரான லுஸாக்காவில் ஐ. நா. தலைமையில் அங்கோலா சம்பந்தமான சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்று வந்தன.

UN Angola Verification Mission என அழைக்கப்படும் 80 பேரைக் கொண்ட ஐ. நா. குழு கடந்த ஏழு மாத காலமாக சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வந்தது.

சமாதானப் பேச்சுக்களின் போது போர்த்துக்கல், அமெ

## 20 வருட உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரத் தவறிய லுஸாக்கா மாநாடு

ரிக்கா, ரஷ்யா ஆகிய மூன்று நாடுகள் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டன.

### அதிகாரப் பங்கீட்டில் இழுபறி

கடந்த ஏழு மாதமாக நடைபெற்று வந்த லுஸாக்காப் பேச்சு வார்த்தைகளில் இராணுவ சட்டப் பிரச்சினைகளில் இரு தரப்பினருக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டிருந்தது. ஆனால் அதிகாரப் பகிர்விலேயே இழுபறி நிலை ஏற்பட்டது.

அங்கோலாவின் 18 மாகாணங்களில் ஒன்றான குவாம்போ (Huambo) மாகாணத்தின் கவர்னர் பதவியை யுனிட்டா கோரி வருகிறது.

அங்கோலாவின் மார்க்ஸிஸ அரசு இதனை வழங்க எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

யுனிட்டாவின் நீண்ட காலக் கோட்டையாக விளங்கி வந்த குவாம்போ மாகாணம் அரச படைகளின் கட்டுப்பாட்டில் தற்போது இருந்து வருகிறது.

லுஸாக்கா பேச்சுவார்த்தையில் அரச தரப்பினருக்கு எவ்வளவோ தூரம் விட்டுக் கொடுத்தாகி விட்டது. இனியும் முடியாது என்கிறார் யுனிட்டா இயக்கத் தலைவர் ஜோனஸ் சாவிம்பி.

இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் தீர்வுத் திட்டத்தை யுனிட்டா இயக்கம் ஏற்கத் தவறுமானால் ஐ. நா. பாதுகாப்புச்சபை யுனிட்டா இயக்கத்துக்கு எதிராக மேலும் தடைகளை அறிவிக்கும்.

இத்தடைகளும் பயனற்றுப் போகுமானால் ஐ. நா. மேலும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும்.

### போர்த்துக்கல் எதிர்ப்பு உணர்வு

போர்த்துக்கேசர் அங்கோலா மக்களை அடிமைகளாக பிடித்து விற்ற காலத்தில் அங்கோலாவின் முதன் முதலாக ஆரம்பமானது போர்த்துக்கல் எதிர்ப்பு உணர்வு.

இது படிப்படியாக வளர்ந்து ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது.

1975ஆம் ஆண்டுவரை போர்த்துக்கலின் ஆதிக்கத்துக்கு எதிராக அங்கோலாவில் இரு இயக்கங்கள் போராடி வந்தன.

ஒன்று இடதுசாரி இயக்கம் Popular Liberation Movement of Angola (Mplp) என்று அழைக்கப்படுகிறது. இதுவே தற்போது அங்கோலாவின் ஆட்சியில் இருந்து வருகிறது.

மற்றது வலதுசாரி இயக்கமான யுனிட்டா The National Union For The Total Independence of Angola என்று அழைக்கப்படுகிறது.

1961 ஆம் ஆண்டு முதல் இந்த இரு தேசிய விடுதலை இயக்கங்களும் போர்த்துக்கேசருக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தை தீவிரமாக்கின. அங்கோலா உட்பட போர்த்துக்கலின் கீழ் இருந்த காலனித்துவ நாடுகளினால் போர்த்துக்கல் அரசுக்கு நெருக்கடி ஏற்பட ஆரம்பித்தது. 1974 ஆம் ஆண்டு போர்த்துக்கலின் ஆட்சி கவிழ்ந்தது.

புதிதாகப் பதவிக்கு வந்த போர்த்துக்கல் அரசு அங்கோலாவுக்கு மட்டுமன்றி ஆபிரிக்காவில் இருந்த தனது மற்றொரு நீண்டகால காலனித்துவ நாடான மொஸாம்பிக்குக்கும் சுதந்திரம் வழங்கியது.

### அதிகாரப் போட்டி

அங்கோலாவுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டவுடன் தேசிய விடுதலை இயக்கங்கள் இரண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றப் போட்டியிட்டன.

கியூபாவின் ஆயுத உதவியும், சோவியத் யூனியனின் ஆதரவும் இருந்ததால் இடதுசாரிகள் ஆட்சியைக் கைப்பற்றினர்.

வலதுசாரி யுனிட்டா இயக்கம் இடதுசாரி மார்க்ஸிய அரசுக்கு எதிராக தனது ஆயுதப் போராட்

**சூரியகாந்தி உதயன் ஞாயிறு சிறப்பம்சம்**

டத்தை ஆரம்பித்தது. தென் ஆபிரிக்காவும், அமெரிக்காவும் யுனிட்டா இயக்கத்துக்கு ஆதரவு வழங்கின.

1991 இல் ஐ. நாவின் தலையீட்டில் சமாதான ஒப்பந்தம் ஏற்படும் வரை இந்த உள்நாட்டு யுத்தம் நீடித்தது.

### 1991 ஒப்பந்தம்

யுனிட்டா இயக்கத்துக்கும் அங்கோலாவின் மார்க்ஸிய அரசுக்கும் இடையில் 1991 இல் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் தேர்தலுக்கு முன் இரு தரப்பினரும் தமது படையினரைக் கலைத்து ஆயுதங்களை ஐ. நா. மேற்பார்வையின் கீழ் ஒப்படைக்க வேண்டும்.

ஆனால் அரசு தரப்பு இயன்ற அளவு ஒப்பந்தத்தின் பிரகாரம் நடந்துகொண்டது. யுனிட்டா இயக்கத்தினர் தவறி இருந்தனர்.

1991 ஒப்பந்தத்தின் பிரகாரம் 1992 செப்டம்பர் மாதம் அங்கோலாவில் ஐ. நாவின் மேற்பார்வையின் கீழ் தேர்தல் நடத்தப்பட்டது.

தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை யுனிட்டா இயக்கம் ஏற்க மறுத்து விட்டது.

தேர்தலில் மோசடி நடைபெற்றதாகக் கூறி மீண்டும் முழு அளவில் அரச படையினருக்கு எதிராக யுத்தத்தை ஆரம்பித்தது.

அரசு அப்போது யுத்தத்துக்கு ஆயத்தமில்லாது இருந்தது. நான்கு பிரதான மாகாணங்களை யுனிட்டா இயக்கத்திடம் இழந்தது.

அங்கோலாவில் மீண்டும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக யுனிட்டா இயக்கத்தை பேச்சுவார்த்தை மேசைக்கு இழுக்கும் ஐ. நாவின் முயற்சிகள் பயனளிக்கத் தவறின.

யுனிட்டா இயக்கம் பேச்சுவார்த்தைக்கு வராவிட்டால் அந்த இயக்கத்துக்கு எதிராக எரிபொருள் மற்றும் ஆயுதத் தடையை விதிக்கப் போவதாக 1993 செப்டம்பரில் ஐ. நா. பாதுகாப்புச்சபை அறிவித்தது.

இதன் பின்பே லுஸாக்காவில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகி கடந்த ஏழு மாத காலமாக நடைபெற்றன.

### அங்கோலாவின் வரலாறு

ஆபிரிக்காவின் தென்மேற்கில் அமைந்துள்ள அங்கோலா முன்னர் 'போர்த்துக்கீஸ் மேற்கு ஆபிரிக்கா' (Portuguese West Africa) என்று அழைக்கப்பட்டு வந்தது.

நீண்ட காலம் காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்த நாடுகளில் அங்கோலாவும் ஒன்று.

1483ஆம் ஆண்டு அதாவது இலங்கைக்கு போர்த்துக்கேசர் வருவதற்கு முன்னரேயே

**சஞ்சாரன்**

அங்கோலாவுக்குப் போர்த்துக்கேசர் சென்றிருந்தனர்.

அப்போது ஆட்சியில் இருந்த கொங்கோ (Kongo) அரச பரம்பரையினரையே இவர்கள் கிறிஸ்தவர்களாக மதமாற்றியதுடன் படிப்படியாக முழு அங்கோலாவையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருந்தனர்.

1975ஆம் ஆண்டில் அங்கோலா சுதந்திரம் அடையும் வரை போர்த்துக்கலின் ஒரு காலனித்துவ நாடாகவே இருந்து வந்தது.

### எல்லைகள்

ஸயர், சாம்பியா, தென்மேற்கு ஆபிரிக்கா, அத்லாந்திக் சமுத்திரம் ஆகியவையே அங்கோலாவின் எல்லைகள்.

கோப்பியும், பெற்றோலியமும் அங்கோலாவின் பிரதான ஏற்றுமதிப் பொருள்கள்.

அங்கோலாவின் பிரதான நகரங்களான லுவாண்டாவிலும் (Luanda) குவான்கோவிலும் (Huango) இரு பிரதான விமான நிலையங்கள் உள்ளன. மற்றும் சில நகரங்கள் விமானங்கள் தரை இறங்கக் கூடிய ஓடு பாதைகளைக் கொண்டுள்ளன. அங்கோலாவின் தலைநகரம் லுவாண்டா.

### பூர்வீக குடிகள்

அங்கோலாவின் பூர்வீக குடிகள் பந்து (Bantu) இனத்தைச் சேர்ந்தவர்கள்.

முழுச் சனத்தொகையில் அரைவாசிப் பேர் ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள். சனத்தொகையிலும் 85சதவீதமானோர் படிப்பறிவற்றவர்கள்.

### அடிமை வியாபாரம்

போர்த்துக்கீசரின் ஆட்சிக் காலத்தில் 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளில் அங்கோலா அடிமை வியாபாரத்துக்குப் பெயர்போன நாடாக இருந்து வந்தது.

அடிமை வியாபாரத்தின் பிரதான சந்தை தலைநகர் லுவாண்டா.

வருடம் ஐயாயிரம் முதல் பத்தாயிரம் வரையிலான அங்கோலா மக்கள் அடிமைகளாக வெளிநாடுகளுக்கு விற்கப்பட்டனர். பெரும்பாலானவர்கள் பிறேஸிலுக்கு கொண்டு போகப்பட்டு, அங்குள்ள தோட்டங்களில் வேலை செய்யவிடப்பட்டனர்.

சுமார் மூன்று லட்சம் மக்கள் வரை அடிமைகளாக விற்கப்பட்டனர்.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் உலகில் அடிமை வியாபாரம் தடை செய்யப்படும் வரை அங்கோலா மக்களை அடிமைகளாக விற்று போர்த்துக்கல் பெரும் பணத்தை ஈட்டி இருந்தது.

லுஸாக்கா தீர்வுத் திட்டத்தை இம்மாதம் முடிவுக்கு முன் யுனிட்டா இயக்கம் ஏற்கத் தவறுமானால் அங்கோலா நெருக்கடியில் ஐ. நாவின் தலையீடுகள் மேலும் அதிகரிக்கும்.

யுனிட்டா இயக்கம் தனது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள வைரம் மூலமும் யானைத்தந்தம் மூலமும் பெரும் அளவு பணத்தை ஈட்டிவைத்துள்ளது. இந்த இயக்கம் 1970 — 80 களில் காடுகளில் மறைந்த காலம் மீண்டும் ஏற்படமாட்டாது என்றே நம்பப்படுகிறது.

ஐ. நாவின் தலையீடும், தீர்வுத் திணிப்பும் தேசிய விடுதலை இயக்கம் ஒன்றுக்குப் பெரும் சவால் என்பதில் சந்தேகம் இல்லை. ★

# வியாழன் - வால்வெள்ளி மோதல்

# நெருப்பு மழையாக பூமியை தாக்குமா?

வியாழக் கிரகத்துடன் ஷூமேக்கர்- லெவி வால் நட்சத்திரம் மோதவிருப்பதாக விண்வெளி விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து இரு முக்கிய விடயங்களை விஞ்ஞானிகள் சரிவர ஆய்வு செய்யவில்லை என்றே அவர்களின் எதிர்பார்ப்புகளின் மூலம் விளங்கக் கூடியதாக உள்ளது.

ஒன்று— வியாழகிரகத்தின் ஈர்ப்புச்சக்தியின் தன்மை, அது பூமியில் ஏற்படுத்தக் கூடிய தாக்கங்கள்.

மற்றது — வால்வெள்ளியின் தன்மை அது வியாழனிலும் பூமியிலும் சூரியமண்டலத்தில் உள்ளகோள்களிலும் ஏற்படுத்தக் கூடிய விளைவுகள்

### ஆய்வில் குறைபாடுகள்

இன்றைய வானியல் ஆராய்ச்சிகள் தொலைநோக்கிகள் மற்றும் விண்வெளிக் கலங்கள் அனுப்பும் படங்கள் மூலமுமே நடைபெறுகின்றன. இவை வியாழனின் மூலகங்களையோ, அன்றிவால் நட்சத்திரத்தில் உள்ள மூலகங்களையோ சரிவரக் கணிக்கக் கூடியதாக இல்லை. பல விஞ்ஞானக் கோட்பாடுகளின் படியும் அவதானிப்புகளின்படியும் இக்கிரகங்களின் அமைப்பு, செயல்பாடு இப்படித்தான் இருக்கலாம் என்றே முடிவு செய்யப்படுகின்றன. ஆகவே பல விஞ்ஞான ஆராய்ச்சி குறைபாடுகளின் மத்தியில் இவை தீர்மானிக்கப்பட்டுள்ளன. எனவே விஞ்ஞான ஆராய்ச்சியில் பல விஞ்ஞான கோட்பாடுகளை எடைபோடும் போது வியாழன் வால்வெள்ளி மோதல் சாத்தியமில்லை என்றே கருத இடமுண்டு.

### விண்கற்கள்

விண்வெளியும் அலைந்து திரியும் பெரிய விண்கற்கள் (Meteors) வியாழனில் மோதலாம். அதனால் பூமியில் ஏற்படும் தாக்கமும் நிச்சயமாக இருக்கலாம். காரணம், இவை நிதானமான ஈர்ப்பு சக்தியை விண்வெளிப் பாதையை கொண்டிராதவையாகும்.

வால் நட்சத்திரம் என்பது ஒரு குறிப்பிட்ட பாதையில் செல்லும் தன்மை உடையது.

விண்வெளி ஈர்ப்புச் சக்திகளினால் கட்டுப்படுத்தக் கூடியது. ஆகவே நாம் ஓர் உலக அழிவை எதிர்நோக்கும் போது தான் கோள்கள் வால்வெள்ளிகள் தன் இசைப்படி பாதை மாறும் மோதல்கள் நடைபெறும் பல அழிவுகள் ஏற்படும்.

இவ்விஞ்ஞானக் கோட்பாடுகளை வைத்து ஆராயும் போது வியாழன்— வால்வெள்ளி மோதல் சாத்தியமானால் அது எப்படி பூமியில் எந்தவித விளைவையும் ஏற்படுத்தாது என்று நம்ப முடியும்?

### விஞ்ஞானிகளின் கூற்றை நம்பமுடியுமா?

அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் NASA வுடன் முன் ஒரு முறை தொடர்பு கொண்டு பல புதிய விஞ்ஞானக் கோட்பாடுகளை (முன்பு ஏற்றுக் கொள்ளப்பட்டவைக்கு முரண்பாடாக) எனது விளக்கங்களுடன் கொடுத்துள்ளேன். அவை பிழையானவை என்று நிரூபிக்க போதிய ஆதாரங்கள் இன்னும் கிடைக்கவில்லை. ஆகவே விண்வெளி விஞ்ஞானிகளின் கூற்றை நூறு சதவீதம் நம்பவே இடமில்லை.

சோதிடவிஞ்ஞானம் பண்டைய தமிழ் மக்களின் விண்வெளி ஆராய்ச்சியின் முதிர்வையும், கணிதத் திறமையையும், கோள்களின் தன்மைகளையும் அவற்றின் சுற்றுப் பாதைகளையும் உயிரினங்களில் அவை ஏற்படுத்தும் தாக்கங்களையும் துல்லியமாக காட்டும் காலக்கண்ணாடியாக விளங்குகிறது. மேலைத்தேச விஞ்ஞானிகள் இப்பக்குவ நிலைக்கும் இன்னும் வரவில்லை என்றே தெரிகிறது.

வியாழன் சூரிய மண்டலத்தின் பெரிய கோள், பூமியில் உயிரினங்கள், தாவரங்கள்

**ஜூலை 16-22 மோதல் நடக்காமலும் போகலாம்**

காலநிலை இவைகளில் ஏற்படும் வளர்ச்சி அழிவு, உற்பத்தி முதலிய இக்கோளின் சக்திக்கு உட்படுகின்றன. பெரிய மற்றக்கோளாகிய சனி பூமியில் விஞ்ஞான வளர்ச்சி தொழில் வளர்ச்சி பொறியியல் வளர்ச்சி மின்இயல் முதலிய வற்றுக்கும் அழிவுகள். இவைகளுக்கும் கற்பனா சக்தியை கொடுக்கும் கிரகமாக இருக்கிறது.

வால்வெள்ளி ஒன்று இதில் எக் கிரகத்துடன் மோதினாலும் பூமியில் பல விநோத மாற்றங்களும், அழிவுகளும், உயிர்ச்சேதங்களும் ஏற்பட ஏதுவாகும். இது நம்முன்னோர்களினால் விஞ்ஞான முறைப்படி கண்டுபிடிக்கப்பட்டு சோதிடமாக நமக்கு கிடைத்துள்ளது.

### வால்வெள்ளியின் தோற்றம்

சோதிட ரீதியில் வால் வெள்ளி (Comet) [illegible]யின் தோற்றம் [illegible] நிகழ்வுகளின் முன் எச்சரிக்கையாகக் கருதப்படுகிறது. இவ்வுண்மையை பின்வரும் அண்மைக்கால நிகழ்வுகளில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

முதலாவதாக 1910 ஆம் ஆண்டு பூமிக்கு அண்மையில் வந்த ஹேலி (Halley) வால் வெள்ளி 1914ஆம் ஆண்டு ஆரம்பமான முதலாவது உலக யுத்தத்துக்குக் காரணமாக இருந்தது 1939ஆம் ஆண்டில் தோற்றிய ஒரு வால்வெள்ளி 2ஆவது உலகயுத்தத்தின் அகோரத் தன்மைக்கும் அணுகுண்டுத் தாக்குதலுக்கும் காரணமாக இருந்தது 1986 இல் திரும்பத் தோற்றிய ஹேலியின் (Halley) வால்வெள்ளி இன்று உலகில் நடக்கும் பல்வேறு இன ஒழிப்பு போர்களுக்கும் துன்பங்களுக்கும் காரணமாக உள்ளது.

இவற்றை ஆராயும் பொழுது வால்வெள்ளிகள் மனித நற்பண்புகளை மாற்றி போர் அழிவுகள், பகைமைகள் பயங்கர விஞ்ஞான கண்டு பிடிப்புகளுக்கு வித்தாக அமைகின்றன. இங்கு நாம் அவதானிக்க வேண்டிய உண்மை வால்வெள்ளி தோன்றி மூன்று, நான்கு வருடங்களின் பின்தான் இக் கிரகத்தின் உக்கிர விளைவுகள் நிகழ்கின்றன என்பதேயாகும்.

1910 ஆம் ஆண்டில் [illegible] 1910 ஆம் ஆண்டு தோற்[illegible] விளக்குமாற்றுக் குஞ்சம் போல் கிழக்குத் திசையில் இருந்து மேற்குத் திசைவரை வியாபித்திருந்ததாகவும் வானியல் விஞ்ஞானிகள் பூமியில் இது மோதும் அபாயம் நெருங்கி விட்டதாகவும் அறிவித்தார்கள். ஆனால் அதிர்ஷ்டவசமாக அது 3, 4 வினாடி வித்தியாச வேகத்தில் பூமியின் பாதையில் இருந்து விலகிச் சென்று விட்டதாக கூறப்படுகின்றது. ஆகவே இந்த நிகழ்வோடு தற்சமயம் ஏற்படும் என்று கருதும் வியாழ கிரகமோதலும் நடைபெறாமல் போகும் சாத்தியம் உண்டு.

அண்மைக்காலத்தில் ரஷ்ய விஞ்ஞானி தாம் எழுதிய வியாழன் பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சி நூலில், பலகோடி ஆண்டுகளுக்கு முன் ஒரு வால் வெள்ளி வியாழனின் ஈர்ப்பு சக்திக்குள் சென்று அதன் உபகோள் ஒன்றை தூக்கி வெளியே வீசியது. அக்கோள

—ச. தாமோதரம்—
விஞ்ஞான ஆசிரியர்

செவ்வாய்க்கிரகத்தைத்தாண்டி (பாதையை) பூமிக்கு அண்மையில் வந்தது.

அதனால் பூமி, சந்திரனில் பிரளயம் ஏற்பட்டு பல மாற்றங்கள் நிகழ்ந்தன — அதன் பின் அது சூரியனை நோக்கி சென்றது. பின்னர் அது சூரியனின் ஈர்ப்பு விசையினால் கவரப்பட்டு சூரியனைச் சுற்றிக் கொண்டு இருக்கிறது. அக்கோள் சுக்கிரனே — என்று விளக்கியுள்ளார். சில விஞ்ஞானிகள் இதை ஏற்க மறுத்தனர். பலர் இதில் சில உண்மைகள் இருப்பதை ஏற்றுக்கொண்டனர்.

நாம் இன்று எதிர்பார்க்கும் வியாழன் — வால்வெள்ளி மோதலை இவ் விஞ்ஞானியின் ஆராய்ச்சி நூல் பிரதிபலிப்பதாகவே உள்ளது.

இங்கு தரப்பட்ட விஞ்ஞானக் கருத்துக்களை ஆராயும் பொழுது வால்வெள்ளி வியாழனில் மோதுமா? அல்லது அதன் ஈர்ப்பு சக்திக்குள் சென்று அதன் உபகோள் ஒன்றை தூக்கி வீசுமா? அதன் பெறுபேறுகள் என்ன என்பதை விண்வெளி ஆய்வாளர்களும் அறிவாளிகளும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய விடயமாகும்

### உலகில் ஏற்படக் கூடிய மாற்றங்கள்

ரஷ்ய விஞ்ஞானியின் ஆராய்ச்சி முடிவுகளையும் மற்றும் விண்வெளி விஞ்ஞான கோட்பாடுகளையும் நோக்கும் பொழுது வியாழனன்று வால்வெள்ளி மோதலோ அன்றி அதன் ஈர்ப்பு விசை தாக்கத்தால் ஏற்படும் விளைவுகளோ பூமியை உடனடியாக வந்தடையா விட்டாலும், 4 வருட எல்லையில் முன்பு குறிப்பிட்டது போல் வால்வெள்ளியின் அகோர விளைவுகளை பூமியில் உயிரினங்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

வால் வெள்ளி வியாழனில் மோதும் பட்சத்தில் விஞ்ஞானிகள் கூற்றுப்படி பல பயங்கர விளைவுகள் வியாழனில் ஏற்படலாம். ஆனால் வியாழன் வால் வெள்ளிச் சிதறல்களும் துண்டங்களும் தூசும் விண்கற்களாக (Meteors செவ்வாய் மண்டலத்தை கடந்து. பூமியின் வாயு மண்டலத்தில் பிரமாண்டமான முகில் கூட்டமாக பரந்து, சூரியனை பல மாதங்களுக்கு மறைத்து விடும். அத்துடன் இம் முகில் கூட்டம் கதிர் வீச்சுள்ள தூசு துணிக்கைகளை கொண்டதாகவும் இருக்கும். இந் நிகழ்வினால் பூமி மண்டலத்தின் உயிரினங்கள் பல அழியும். விண் வெளிக் கற்களும் தூசு துணிக்கைகளும் அதிவேகத்துடன் காற்று மண்டலத்தில் பிரவேசிக்கும் பொழுது ஆயிரத்து 500 பாகை செல்சியஸ் உஷ்ணத்தில் எரியும். இது நெருப்பு மழையாக பூமியை தாக்கலாம் என்பதும் விஞ்ஞான சாத்தியமானது.

கத்தோலிக்க வேதாகமத்தின் படி சில தீர்க்கதரிசிகள் இரண்டாயிரம் ஆண்டில் பூமி நெருப்பு மழையினால் அழியக் கூடும் என எழுதியுள்ளார்கள். உலகில் தர்மம் அழியும் பொழுது பூமியும் பல அழிவுகளை எதிர் நோக்கும். ஆகவே நிகழப் போகும் சூரிய மண்டலத்தின் அதிசய நிகழ்ச்சி இறைவன் அருளால் உலகுக்கு தீங்கில்லாமல் இருக்க சகலரும் இறை வணக்கத்தில் எதிர்வரும் நாட்களை பயன்படுத்துவோமாக! ★

**காணி விற்பனைக்கு**

மூளாய் மேற்கில் அமைந்துள்ள 7 பரப்பு, 4 பரப்பு விஸ்தீரணமுள்ள 2 காணிகள் சகலவசதிகளுடன் விற்பனைக்குஉண்டு.

இ. பரம்சோதி.
மூளாய், சுழிபுரம்

(81835)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய போட்டோ பிரதி இயந்திரம் - Gestetner Copier 2201 விற்பனைக்கு உண்டு. அறிவரன், இல. 809, அரசடி வீதி, யாழ்ப்பாணம் (வானவில்லுக்கு அருகில்) (31781)

இருவாரம் நிரம்பிய சில்கி, பிராமா குஞ்சுகளும், முட்டையிடும் வெள்ளை வான்கோழியும், 3 மாதம் நிரம்பிய சேவல், பேட்டு கோழிகளும், அடைவைக்க உகந்த சில்கி, பிராமா, பாபடிக்கஸ், போலிஸ் முட்டைகளும் கூட விற்பனைக்கு உண்டு. 684, நாவலர் வீதி, (குமரன் படிப்பகத்திற்கு அண்மையில்) ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். [31842]

ஒன்பது மாத பெண் அல்சேஷன் நாய் விற்பனைக்குண்டு. தொடர்பு: பாலா, இல. 18, றக்கா வீதி, கண்டிக்குளி. (31821)

நோயாளர்கள் பாவிக்கக் கூடிய முச்சக்கரவண்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டியது S. டேவிட், இல 70/5, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம். (31828)

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகள், பண்டம், வான்கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [31817]

ஒரு மாதத்திற்கு உட்பட்ட கோழிக்குஞ்சுகள் மணித்தாராக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. கந்தசாமி அச் சன்ஸ். 16, ஆடியபாத வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். [31836]

### தேவை

தேவன்ஸ் சீயாக்காய்ப் பவுடர் மற்றும் தயாரிப்புகளை தயார் செய்வதற்கு பெண் பிள்ளைகளும், தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கு சைக்கிள் விற்பனையாளர்களும் தேவை. தேவன்ஸ் உற்பத்தியாளர் 237/8, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (7516)

இருவருள்ள குடும்பத்திற்கு சமையல் மட்டும் செய்வதற்கு 45 வயதிற்கு மேற்பட்ட பெண்மணி தேவை. உணவு, உடை இருப்பிடம் தரப்படும். சம்பளம் மற்றும் முழு விவரத்துடன் தொடர்பு கொள்ளவும்: இல. 663, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (31803)

### கோழிக்குஞ்சு விற்பனை

Prima, Christombu Broiler குஞ்சுகள் சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் பதிவுசெய்து சிறு தொகையில் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி. நல்லூர். (31816)

### வீடு விற்பனைக்கு

1½ பரப்பு காணியுடன் சகல வசதிகளுடன் அமைந்த வீடு சுதுமலை தெற்கு மானிப்பாயில் (எச்சாட்டி வைரவ கோயிலடி) விற்பனைக்குண்டு! தொடர்பு: சுசின ஸ்ரோர்ஸ் (இ. அரசரத்தினம்), சாவல்கட்டு சந்தை, ஆனைக்கோட்டை. (31683)

### மணமகள் தேவை

நிரந்தர வருமானமுள்ள உளப்பாதிப்படைந்து சிகிச்சை பெற்றுவரும் ரோகிணி, 42 வயது மணமகனுக்கு சீதனமற்ற மணமகள் தேவை. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும், இல 665, மே/பா உதயன். யாழ்ப்பாணம். (31822)

### மணமக்கள் தேவை

குற்றமற்ற 34, 35, 37 வயது டாக்டருக்கும், 38 வயது எஞ்சினியருக்கும், 32-35 வயது எக்கவுண்டனுக்கும், 30 வயதுப் பெண் டாக்டருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (31840)

### நாய்க்குட்டிகள் விற்பனை

சுத்த இன பொமனேரியன் ஆண், பெண் நாய்க்குட்டிகள் 42 நாட்கள் நிறைவடைந்தவை. பூச்சி அகற்றிய நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: முருகேசன் வைத்தீஸ்வரன், மானிப்பாய் ஆண்கள் இந்துக் கல்லூரிக்கு முன், மானிப்பாய். (7508)

### புலமைப் பரிசில் பரீட்சை

Bond நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்கள் எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். கணிதம், தமிழ் விடைகளுடன் ரூபா 10/- மட்டும். [7445]

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான சனி, ஞாயிறு துரித மீட்டல் வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. அண்மையில் வெளியிடப்பட்ட புலமைப் பரிசில் மாதிரிப் பயிற்சியையும் 'வாராந்தம் வெளியிடப்படும் மாதிரி வினாத்தாள்களையும் பெற்றுக்கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 819, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (31807)

### மகாதேவா ஜோதிடம்

குறிப்பு. கை, வீடு பார்த்தல், குறிப்பு எழுதுதல், அதிர்ஷ்ட எண் மாற்றம் ஆகியவற்றிற்கு ஜோதிடரைத் தினசரி 140, செல்லர் வீதி, கல்வியங்காட்டுச் சந்தைக்கு அருகில் சந்திக்கலாம். (31839)

### மணிக்கூடுகள் திருத்துதல்

சகல மணிக்கூடுகள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ளடில்கா வாச் அண்ட் றேடியோ வேர்க்ஸ், ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை, கண்டி வீதி, சாவகச்சேரி, தலைமையகம் 284, வானவில் அருகில் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (இ-8299)

### ஜோசிட விஞ்ஞானம்

தனுராசியில் புரட்சிக கிரகங்கள் யுரேனஸ் நெப்ரியூனும், துலாராசியில் வியாழ ராகுவும், ஒரே பாகையில் சஞ்சரிக்கும் போது ஆவணி, புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் தேசத்தில் வன்முறைகளையும், குண்டு வெடிப்புக்களையும், அரசியல் கொலைகளையும் உண்டாக்கும். ராகு கேது மாற்றம் எங்கும் விற்பனையாகிறது. 'சத்யா' கட்டுரை. (7263)

### பெயர்மாற்றம்

ஸ்ரீ லங்கா அச்சகம், ஸ்ரீகாந்தா அச்சகம் ஒன்றிணைந்து இலங்கையன் பதிப்பகம் என்ற பெயரில் சேவையாற்றுகிறது. இலங்கையன் பதிப்பகம். பதிப்பகசாலை, ராஜா தியேட்டர் அருகில், யாழ்ப்பாணம். (31668)

### இறைச்சிக் கோழி

புறாயிலர் இறைச்சிக் கோழி சனி, ஞாயிறு தினங்களில் சுத்தம் செய்து கொடுக்கப்படும். [வெலிங்டன் சந்தி அறிவகம் அருகில்] 382, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [31838]

### மிருதங்கம்

ஒரு கொட்டு தந்த முழு வேலையும் செய்ய 1000/-. குறித்த தவணையில் செய்து பெற்றுக்கொள்ளலாம். கோவிந்தபிள்ளை விஜயகுமார், 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம் (31797)

## இலங்கையருக்கு நட்டஈடு

கொழும்பு, ஜூலை 10

ஈராக்குக்கு எதிரான வளைகுடா யுத்தத்தின் குலைத்தின் உயிரிழந்த 36 இலங்கையர்களின் குடும்பங்களுக்கு 55 லட்சம் ரூபா நட்டஈடு இம் மாதம் 12ஆம் திகதி வழங்கப் படவுள்ளது.

இலங்கை வெளிநாட்டு தொழில் முகவர் பணிமனையில்லைத்து இந்த நட்டஈடு வழங்கப்படவுள்ளது. (ஒ-எ-6)

## புனித ஹென்றியரசர் கல்லூரி
இளவாலை

## கல்லூரி தினவிழா

ஜூலை மாதம் 13ஆம் திகதி புதன்கிழமை காலை 8-30 மணிக்கு கொண்டாடப்படவுள்ளது.

பழைய மாணவர்கள் அனைவரும் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய். (31809)

## 3ஆம் ஆண்டு நினைவுகள்



பிறப்பு: 15 — 05 — 1947

இறப்பு: 13 — 07 — 1991

## அமரர் சுந்தரர்பிள்ளை ஆனந்தராசா
(கண்ணியம் வெதுப்பகம் - உரிமையாளர், இருபாலை)

திதி: 10-07-1994

எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும், உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது!

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்!

அன்பு மனைவி ஆ. சிறீவதனா,
பிள்ளைகள் ஆ. ரசிந்தன்.
ஆ. தர்சன்.

கண்ணியம் வெதுப்பகம்,
இருபாலை,
கோப்பாய். (31798)

சிவமயம்

மட்டுவில் - சந்திரபுரம்

## கனுவத்துச் சிவன் கோயில்
## சாந்தநாயகி சமேத சந்திரமௌலீசர்
# மகா கும்பாபிஷேகம்

## (15-07-94 வெள்ளிக்கிழமை)

கிரியாரம்பம்
11-07-94 திங்கட்கிழமை
காலை 9-05 முதல்

எண்ணெய்க் காப்பு
14-07-94 வியாழன் காலை 8மணி தொடக்கம் பகல் 1மணி வரை

மகா கும்பாபிஷேகம்
15-07-94 வெள்ளிக்கிழமை
காலை 8-20 மணி தொடக்கம் 10-09மணி வரை

இதனைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் செய்யவிரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

- ஆலய பரிபாலகர்.

[31823]

## DIPLOMA IN COMPUTER PROGRAMMING, BASIC LANGUAGE

ஆரம்பம்: 14-07-1994

- கூடிய செய்முறைப் பயிற்சி
- திறமையான மாணவர்களுக்கு விசேட பயிற்சிக் காலம்

விவரங்களுக்கு:

வட இலங்கை தொழில்நுட்ப கல்லூரி
(NORTH CEYLON TECHNICAL INSTITUTE)
14 ST. PETER'S LANE.
JAFFNA.

[சி-8726]

## அறிவித்தல்

## மூளாய்
## கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

பதிவு இல./83 - 04-04-1936

காரைநகர், பண்டத்தரிப்பு, மாதகல் உட்பட மற்றும் இடங்களிலிருந்து தற்பொழுது இடம் பெயர்ந்து வசிக்கும் இவ் வைத்தியசாலைச் சங்கத்தின் அங்கத்தவர்கள் தங்கள் தற்போதைய முகவரியுடன் பின்வரும் விவரங்களையும் இச் சங்கத்திற்கு 94-07-24ஆம் திகதிக்கு முன்பு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

1. முழுப் பெயர்;
2. அங்கத்தவர் இலக்கம்;
3. முன்னைய முகவரி;
4. தற்போதைய முகவரி;

வ. அ. வரதராசா,
தலைவர்.

மூளாய்,
சுழிபுரம்,
10-07-1994.

[இ-8719]

## 3ஆம் ஆண்டு நினைவில்

மண்ணில்: 04 — 04 — 1932

விண்ணில்: 10 — 07 — 1991

## அமரர் வ. யோ. தம்பிஐயா
(ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலை ஊழியர்)

ஆண்டுகள் கோடி ஓடியே போகினும் அன்புடை நினைவிலே அனுதினம் நனைவோம்.

மனைவி,
த. யோ. தம்பிஐயா
நாரிய உத்தியோகத்தர்
ஆதார வைத். மந்திகை.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[7510]


# ஜே. ஜே. ஜே.
## வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்

514/14, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,

கண், காது, மூக்கு, தொண்டை (E. N. T.) முறிவு, மகப் பேறு சத்திர சிகிச்சை, சிறுபிள்ளைக்குரிய வைத்தியம், சரும நோய்கள் என்பவற்றிற்கு விசேட நிபுணர்களால் ஆலோசனை வழங்கப்பட்டு வருகின்றது அத்துடன் E. C. G, ஆய்வு கூட சேவைகளும் [LAB]. அ. சுந்தரலிங்கம் M. L. Tயால் நடைபெறுகின்றன.

[31843]

## 31 ஆவது நாள் நினைவஞ்சலி




## அமரர் சதாசிவம் குலவீரசிங்கம்
(ஓய்வு பெற்ற காப்புறுதிக் கூட்டுத்தாபன யாழ் பிரதேச அலுவலக ஊழியர்)

நற்தா விளக்காக என்றுமே பிரகாசித்த முகத்துடன், எம்முடன் பல வருடங்கள் சேவையாற்றி திடீர் மரணமெய்திய எம் இனிய நண்பரது பசுமை நிறைந்த நினைவுகள் என்றுமே எம்மை விட்டகலாத இவரது பிரிவுத்துயரால் துயருறும் மனைவி, பிள்ளைகள், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து, அன்னாரது ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சக ஊழியர்கள்,
இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,
யாழ் பிரதேச அலுவலகம்.

(31826)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயாள் மடியில்: 15 — 01 — 1973

மண்ணின் மடியில்: 13 — 07 — 1991

## வீரவேங்கை லெப்டினன்ட் கஜன்
(செல்வன் சின்னையா சீவரத்தினம்)

திதி: வளர்பிறை துதியை

## 10 - 07 - 1994

எரிகின்ற தாயகத்தின் மீட்பிற்காய் களம் குதித்தாய் உறுதி நின்று போர் புரிந்தாய் எதிரிகளின் மகிழியிலே இடைநடுவில் வீழ்ந்தவனே எம் இதயக் கோயிலிலே குடிகொண்ட இளங் கொழுந்தே!

உனக்கு எமது அஞ்சலிகள்.

புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்!

— குடும்பத்தினர்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

(7260)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## குருதிக்கொடை ஊக்கமுறுக

மணி விழாக்கள், சேவை நலன் பாராட்டு விழாக்கள், கௌரவிப்பு விழாக்கள் என்பவற்றுக்கு இப்போது எமது பகுதியில் குறைவில்லை.

சமூகத்துக்குச் சேவை செய்தவர்கள், அந்தந்தத் துறைகளில் திறமை பெற்று விளங்கியவர்கள் ஆகியோரை அவர்கள் இறந்த பின்னர் நினைவு கூர்ந்து பாராட்டி விழா எடுக்கும் பழைய வழக்கம் இப்போது மாறி வருகிறது. சேவையாளர்களை, திறமையாளர்களை வாழும் போதே பாராட்டிக் கௌரவித்து விழா எடுக்கும் புதிய மரபு ஒன்று வளர்ந்து வருகிறது.

அந்தப் புதிய மரபின் பிரதிபலிப்பாக கிராமங்கள் தோறும் நாளாந்தம் பாராட்டு விழாக்கள் என்றும், கௌரவிப்பு விழாக்கள் என்றும் நடக்கின்றன. சில இடங்களில் ஒரே நாளில் காலையில் ஒன்றும் மாலையில் இன்னொன்றும் என்று பாராட்டு வைபவங்கள் மலிந்து விட்டதும் உண்டு.

ஒருவன் சிறந்த கலைஞனாக இருக்கலாம், சமூகத்துக்கு அளப்பரிய சேவைகள் புரிந்த சமூக சேவையாளனாக இருக்கலாம், சிறந்த கல்விமானாக அல்லது சாதனையாளனாக இருக்கலாம். அவனது சேவையும் திறமையும் அவன் இறந்த பின்னர் நினைவு கூரப்படுவதற்குப் பதிலாக அவன் வாழும் போதே பாராட்டப்படுவது தான் சிறந்தது.

அந்தப் பாராட்டுதலும் கௌரவிப்பும் அவனது திறமையையும், சேவையையும் மேலும் வளர்ப்பதற்கு ஓர் உந்து சக்தியாக அமையும். அவனை மட்டுமன்றி ஏனையோரையும் அவன் வழி நின்று சேவை செய்வதற்கும், அவரவர் திறமைகளை வளர்ப்பதற்கும் ஊக்கமளிக்கும் தூண்டு சக்தியாகவும் விளங்கும். இந்தப் புதிய மரபு சமூகத்தில் சேவை மனப்பான்மை உள்ளவர்களும், திறமைசாலிகளும் பெருகுவதற்கான ஊற்றுக் கண்ணாக அமையும் என்பதிலும் ஐயமில்லை.

ஆனால், இப்போது நடைபெறும் பாராட்டு விழாக்களைப் பார்க்கும் போது எவர் மனதிலும் ஒரு பிரதான கேள்வி எழவே செய்கிறது. பாராட்டப்படுபவர்கள் கௌரவிக்கப்படுபவர்கள் எல்லோருமே அதற்குத் தகுதி உடையவர்கள்தானா? அந்தத் தகுதிக்கான அளவுகோல் ஒரு பொது நியமத்தை உடையதா? அல்லது சம்பந்தப்பட்டவர்களைச் சார்ந்தவர்கள் தமக்குத் தாமே வகுத்துக் கொள்ளும் அளவுகோலா?

மக்கள் அபிமானம் பெற்றவர்கள், சாதனை படைத்தவர்கள், உண்மையான சேவை செய்தவர்கள், திறமை உள்ளவர்கள் என்பதனை நிர்ணயிப்பதற்குப் பொதுவான அளவுகோலும், நியமங்களும் அவசியமில்லையா? அவரவர் நினைத்தவாறு அளவுகோல்களை நிர்ணயித்து, தங்களைச் சார்ந்தவர்களையும், தமக்கு உதவியவர்களையும் பாராட்டுவது இவ்விழாக்கள் ஊடாக எதிர்பார்க்கப்படும் நல் விளைவுகளுக்கு எதிர்மாறான விளைவுகளை உண்டாக்காவா?

இந்த வகையில் குருதிக் கொடை நல்கியவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் புதிய பாங்கு உரிய அளவுகோல் கொண்டதெனக் கருதலாம். குருதிக் கொடை என்பது உயிர் காக்கும் தானம். உலகத்தில் மிக உயர்ந்த உன்னதமான தானம். வெறும் நோட்டுக்களால் விலை மதிக்க முடியாதது.

அந்தத் தானத்தை மனமுவந்து செய்பவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். இவை போன்ற பாராட்டு விழாக்கள் மேலும் பலரை இந்த அதி உன்னத தானத்தைச் செய்யத் தூண்டும். குருதிக் கொடை பற்றிய உண்மையை இன்னும் சரியாக விளங்கிக் கொள்ளாத இப்பகுதி மக்கள் மத்தியில் இத்தகைய ஊக்கமளித்தல்களும், உந்துதல்களும் அவசியம்.

இது போன்ற பெறுமதியான புதிய புதிய கோணங்களில் உகந்த அளவுகோல் கொண்டு எத்தனை பாராட்டு விழாக்கள் நடைபெற்றாலும் அது சமூகத்துக்கு நன்மை பயக்கும்.

# தெற்கில் ஐ.தே.க. - பொ.ஐ. முன்னணி கடும் மோதல்;
# வன்னி-கிழக்கில் கூட்டணி-முக்கூட்டு அணி மோதல்

தென்னிலங்கையில் தேர்தல் அமளி சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டது.

ஒரு கட்சியில் இருந்து விலகுவதும் அடுத்த கட்சியில் சேர்வதும் என்று அரசியல்வாதிகள் ஒரே "பிஸி"யாக உள்ளார்கள். குறிப்பிட்ட கட்சியில் வருடக்கணக்கில் உறுப்பினர்களாக இருந்தவர்கள், அந்தக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் தமக்கு இடம் கிடையாது என்று அறிந்ததும், அதிலிருந்து விலகி, அதன் கொள்கைகள் மக்கள் நலனுக்கு உகந்தவை அல்ல என்று அறிக்கை விடுகிறார்கள். அத்தனை வருடகாலமாகத் தாங்கள் குறிப்பிட்ட அந்தக் கொள்கைகளை ஆதரித்தே அக்கட்சியில் இருந்தார்கள் என்பதனை மறந்து விடுகிறார்கள்.

இப்படி ஓர் அறிக்கையை விடுத்ததும் அடுத்த கட்சி இவரை ஓர் "அரசியல் வீரனாக" கருதி தன்னுடன் சேர்த்துக் கொள்கிறது. தனது வேட்பாளர் பட்டியலிலும் அவரது பெயரைச் சேர்த்துக்கொள்கிறது.

அரசியல்வாதி ஒருவர் அடுத்த அணியில் இருந்து விலகினால், அது தங்கள் கட்சியில் சேர்வதற்கான உயர்ந்த தகுதி என்று கட்சிகள் ஒரு வாய்ப்பாடை வகுத்துள்ளன! அதனால் கடைசி நேரக் குத்துக்கரணங்கள் வெகு தாராளமாக மலிந்து விட்டன. இந்தக் குத்துக்கரணங்களுக்கும், தாவல்களுக்கும் இன்று தான் கடைசி நாள்.

தேர்தலுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் நாளையோடு முடிவடைகிறது. தேர்தலில் போட்டியிட விரும்பும் சகல கட்சிகளும் தமது வேட்பாளர்களின் பட்டியல்களை நாளைக்குத் தாக்கல் செய்துவிட வேண்டும். ஆகையால் தமது வேட்பாளர்கள் குறித்து — யார் யாரை நீக்குவது, யார் யாரைப் புதிதாகச் சேர்ப்பது என்பது குறித்து — கட்சித் தலைமைப்பீடங்கள் இன்றே முடிவு செய்துவிட வேண்டும்.

ஆகையால் அரசியல் வாதிகளின் தாவல், குத்துக்கரணம் அடித்தல் விளையாட்டுகள் இன்றுடன் முடிந்துவிடும். அதன் பின்னர் நாளை தொடக்கம் வேட்பாளர்களாகப் போட்டியிடுவோர் மோதிக் கொள்ளும் படலம் களை கட்டத் தொடங்கும். வேட்பாளர்கள் பிரசார அரங்கத்தில் மட்டும் மோதிக் கொண்டால் பரவாயில்லை. வேறு விதமாகவும் மோதுவர். அவர்களின் ஆதரவாளர்களும் பல விதத்தில் தமக்கிடையே மோதுவர்.

எல்லாத் தேர்தலிலும் இந்த மோதல்கள் நடப்பது வழக்கமே. எனினும் தெற்கில் இம்முறை இரண்டு பிரதான அணிகளுக்கும் இடையே கடும் போட்டி நிலவ இருப்பதால், சகல விதமான மோதல்களும் கடுமையாகவே அமையும்!

தென்னிலங்கை அரசியல்வாதிகள் மட்டுமா மோதிக் கொள்கிறார்கள்? இந்திய இராணுவம் வடக்கு — கிழக்கில் நிலை கொண்டிருந்த ஒரே ஒரு காரணத்தால், நாடாளுமன்ற அரசியல் கட்சிகளாகி, இப்போது கொழும்புத்தள (Colombo Based) தமிழ்க் கட்சிகளாகிவிட்ட தமிழர் குழுக்களும் நாடாளுமன்ற ஆசனங்களைப் பிடித்து விட தமக்கிடையே மோதிக் கொள்கின்றன!

கடந்த ஐந்து வருடங்களில் தமிழர் கட்சிகளாக மாறியிருப்பவை, முன்னர் ஒரு காலத்தில் தமிழீழத்தை அடைவதையே தமது இலட்சியமெனக் கூறி, ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவை. இப்போது அந்த இலக்கை மாற்றித் தமது சொந்த நலன் கருதி நாடாளுமன்ற ஆசனங்களுக்காகச் சண்டை போடுகிறார்கள்; ஈழத்துக்காக சிங்கள அரசுடன் சண்டை போடுவதற்குப் பதிலாக சுகபோகம் தரவல்ல நாடாளுமன்ற ஆசனங்களுக்காகத் தமக்கிடையே சண்டை போட்டுக் கொள்கின்றனர்!

### மோதகமும் கொழுக்கட்டையும்

ஸ்ரீலங்காவின் - தென்னிலங்கையின் — பிரதான அரசியல் கட்சிகள் இரண்டுமே தமிழர் விவகாரத்தில் மோதகமும் கொழுக்கட்டையுமாகவே விளங்குகின்றன. தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்கி அவர்களின் தன்னாட்சி அதிகாரத்தை உறுதிப்படுத்தவல்ல சமஷ்டி அமைப்புத் தானும் தீர்வாக வழங்குவதற்கு அவை விரும்பவில்லை.

ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியோ, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின், தமிழர் தாயகத்தைப் பிரித்துவிடும் யோசனையை பசிக்கெனப் பிடித்து நிற்கிறது. அதனைத் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்ப்பதா, விடுவதா என்று முடிவு எடுக்க முடியாத நிலையில், இனப்பிரச்சினை விடயத்தில் தான் பிடிபட்டுக் கொள்ளக் கூடாது என்ற நோக்குடன் காணப்படுகிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி இனப்பிரச்சினை குறித்துத் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தாலும் மிகவும் மேலோட்டமாகவே தொட்டுள்ளது.

★ உண்மையான போதுமான பரவலாக்கல் ★ முறையான அதிகாரப் பரவலை மேற்கொள்ள புதிய நிர்வாக அலகுகள் அமைப்பது. ★ புதிய நிர்வாக அலகுகள் புவியியல், பொருளாதார மற்றும் சமூக அம்சங்களின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமைக்கப்படும் ★ சகல இனங்களின் அபிப்பிராயங்களைக் கேட்டறிந்த பின்னர் இது தொடர்பான அரசமைப்புத் திருத்தங்கள் கொண்டுவரப்படும்.

அரசியல்

இந்தச் சொல் அடுக்கும், வாசக அமைப்பும் சொல்லவந்த விடயத்தைத் தெளிவாகக் கூறவில்லை. உட்கருத்தை வெறும் பூடகமாகக் கொண்டுள்ளது. தலை இல்லாத எலும்புக் கூடாகவே தென்படுகிறது. கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக கற்களை அங்கும் இங்குமாகத் தெட்டம் தெட்டமாகப் போட்டது போல உள்ளது: அதனால் கட்டடம் நேரானதாக அமையுமா அல்லது கோணல் மாணலாக இருக்குமா என்பதனை அது கட்டி எழுப்பப்பட்ட பின்னரே திட்டவட்டமாகக் கூறமுடியும்!

இந்த வகையில் நாடாளுமன்றத்தின் மூலம் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான மார்க்கம் எதுவுமே தெரியாத இருண்ட சூழ்நிலையில், கொழும்புத் தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்கள் எம்.பி. பதவிகளுக்காகத் தமக்கிடையே குடுமிச் சண்டை பிடிக்கிறார்கள்.

### கூட்டுச்சேர கூட்டணி மறுப்பு

இந்திய அரசின் நிர்ப்பந்தத்தின் பேரில், 1989ஆம் ஆண்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏனைய தமிழ்க் குழுக்களுடன் சேர்ந்து வேட்பு மனுக்களைத் தனது பெயரில் தாக்கல் செய்தது. ஆனால் கடந்த ஐந்து வருட அனுபவம் கூட்டணியினருக்கு மிகவும் கசந்துவிட்டதால் போலும், இப்போது தனித்தே போட்டியிடுவது என்று அழுங்குப் பிடியாக நின்று செயற்படுகிறார்கள்.

கிழக்கிலும், வன்னிப்பகுதியிலும் தமக்கு இன்னமும் ஆதரவுண்டு என்று தமக்குள் ஒரு மதிப்பீட்டை நடத்திக் கொண்டு, வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். தமது வெற்றியை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக இவர்கள் நான்கு, ஐந்து வாரங்களுக்கு முன்னதாகவே கட்சியின் புனரமைப்பு வேலைகளைத் தொடங்கியிருந்தனர்.

இத்தனைக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் கொள்கையும் இலக்கும் மாற்றப்பட்டு விட்டன கட்சியின் தற்போதைய பொதுச் செயலாளர் ஏ. தங்கத்துரை அதனைப் பகிரங்கமாகப் பத்திரிகைகளுக்குக் கூறி இருக்கிறார்.

வடக்கு - கிழக்கு சமஷ்டி அமைப்பில் கூடுதலான அதிகாரம் என்ற அடிப்படைக் கோரிக்கையை முன் வைத்தே எமது கட்சி போட்டியிடும் — என்று அவர் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

தனி நாடு கோரும் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை முன் வைத்து 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் அமோக வெற்றி பெற்று, ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தின் பிரதான எதிர்க் கட்சியாக விளங்கிய கூட்டணியினர் —

இப்போது உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதையாக சமஷ்டி அமைப்பில் கூடுதல் அதிகாரம் என்ற கோரிக்கைக்குள் குளிர்காயப் புறப்பட்டிருக்கிறார்கள்!

தன்னாட்சி என்றால் என்ன பொருள் என்று கேட்காமல் விட்டார்களே; அதேபோதும்; என்று ஸ்ரீமான் தமிழ்ப் பொதுசனம் சந்தோஷப்படுகிறார்!

## கூட்டணி அரசியல் கொள்கை உலக்கை தேய்ந்து உளிப்பிடி!

### கொள்கை இல்லாதவர்கள்

இந்த வகையில் கூட்டணியினர் தங்கள் "தனித்துவத்தை"யும் பாதுகாக்க விரும்புகிறார்களாம். "ஏனைய குழுக்களுக்குத் திட்டமான கொள்கைகள் இல்லை, வடக்கு - கிழக்குப் பிரச்சினைகளில் சேர்ந்து உழைக்கிறார்கள் இல்லை. திட்டமில்லாத இக்குழுக்களோடு சேர்ந்து உழைக்க முடியாது" என்றும் தங்கத்துரை மேலும் தெரிவித்திருக்கிறார்.

ஏனைய கொழும்புத் தளத் தமிழ்க் கட்சிகள் (தமிழ்க் குழுக்கள்) கொள்கை இல்லாதவை, திட்டம் இல்லாதவை என்று இப்போதாவது கூட்டணியினரால் கண்டுபிடிக்க முடிந்தது பெரிய கெட்டித்தனமே! கிழக்கில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் அந்தக் குழுக்கள் தமிழர் அரசியலை எந்தளவுக்கு கீழே இறக்கிச் செய்தனவோ அதனை விட மோசமாக இப்போது நடந்து கொள்ளத் தாகக் கிழக்குத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னரே தமிழ்க் குழுக்கள் கிழக்கில் தமது தேர்தல் வேலைகளை முடுக்கிவிட்டிருந்தனவாம் இக்கட்சிகள் சார்பில் வேட்பாளர்களாக நிற்கப்போகும் பலர் மக்களிடம் முன்னர் "வீரம்" காட்டியவர்களும், கப்பம் வாங்கியவர்களுமே என்று உள்விவகாரம் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள்.

இவர்களில் பெரும்பாலானோர் அடிக்கடி கட்சி மாறியவர்கள். அரசியல் கொள்கைக்காக என்று நினைத்துவிடக்கூடாது. எந்தப் பக்கம் நின்றால் அதிகபணம் சம்பாதிக்கலாம் என்பதைக் கணக்குப்போட்டுப் பார்த்து மாறியவர்கள். தாம் சேர்ந்திருந்த கூட்டத்தவர்களிடமே சுருட்டிய கெட்டிக்காரர்கள்!

இப்போது வேட்பாளர்களாக மாறுவதற்கு முன் வந்திருக்கும் பலர் மார்ச்சில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் சில பகுதிகளில் மக்களை மிரட்டி தமது குழுவுக்குத் தாமே புள்ளடி போட்டவர்கள் என்றும் சொல்லப்படுகிறது. இவர்களிடம் திட்டங்களையும் கொள்கைகளையும் எதிர்பார்ப்பது எப்படி?

இத்தகையவர்கள்தான் தமிழ்க்குழுக்களின் வேட்பாளர்களாக மாறப் போகிறார்கள் என்றால் தமிழர்களின் அரசியல் எந்தளவுக்கு மட்டரகமாக மாறியுள்ளது என்பதனைப் புரிந்துகொள்ளலாம்.

முன்னர் மூன்று குழுக்களிலும் இருந்து இடம் மாறித் திருகுதாளங்கள் புரிந்தவர்கள் இப்போது ஒரே கட்சியில் சேர்ந்து முக்கூட்டாகி விட்டார்கள்! மார்ச்சில் வெவ்வேறு கன்னைகளில் நின்றவர்கள் இப்போது கைகோத்து விட்டார்கள் எல்லாம் நாடாளுமன்றக் கதிரைகளுக்காகவே!

கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு அப்போதைக்குத் தக்க சூழ்நிலை இல்லை என்று மார்ச்சில் தெரிவித்த த.வி. கூட்டணியினருக்கு, இப்போது அங்கு உகந்த சூழ்நிலை தெரிகிறது! நான்கு மாதங்களில் அங்கு என்ன முன்னேற்றத்தைக் கண்டார்களோ தெரியவில்லை.

ஆகையால் அவர்கள் திட்டமில்லாத, கொள்கையில்லாத தமிழ்க்குழுக்களுடன் கிழக்கிலும், வன்னியிலும் மோதப் புறப்பட்டு விட்டார்கள். இந்த இரண்டு இடங்களிலும் ரெலோ — புளொட் — ஈரோஸ் முக்கூட்டு முன்னணிக்கும், விடுதலைக் கூட்டணிக்கும் தமிழர் வாக்குகளைப் பிடுங்கிக் கொள்வதில் பெரும்போட்டி நடக்கப் போகிறது!

## கொள்கை, திட்டம் ஏதுமின்றி போட்டியிடும் முக்கூட்டு அணி

### வடக்குத் தேர்தல்

அந்த வகையில் கிழக்கு, வன்னிப் பிரதேசங்களில் (படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில்) வாழும் தமிழ் வாக்காளர்கள் பெரும் துரதிர்ஷ்டசாலிகளே! புத்திசாலித்தனமாக வாக்களிப்பைப் பகிஷ்கரிப்பார்களா?

வன்னியிலும், கிழக்கிலும் தமிழ் வாக்காளர் பாடு பெரும் திண்டாட்டமாக அமையப் போகும் அதே வேளை வடக்கிலும் தேர்தலை நடத்திக் காட்டுவேன் என்று அரசு ஒற்றைக்காலில் நிற்கிறது. கடும் கட்டிச் செயற்படுகிறது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான தீவுப் பகுதியில் அரசாங்கச் செயலகம் நிறுவப்பட்டதாகப் பிரகடனம் செய்து, அங்கு வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கு வசதி செய்யப்பட்டதாகவும் அறிவித்துச் செயற்படுகிறது.

இதனையும் விட எல்லோரையும் ஏமாளிகளாக்கும் திட்டமே பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் முயற்சி. யாழ். தேர்தல் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலுமே வாக்களிப்பு நடைபெறாமல் தேர்தலை நடத்திமுடிக்கும் சூழ்ச்சி. அதாவது நாடாளுமன்ற ஆசனங்களுக்கு ஆசைப்படும் தமிழ் அரசியல்வாதிகள் எல்லோரையும் சேர்த்து ஒரே ஒரு பொதுவேட்பு மனு வைத் தாக்கல் செய்துவிட்டால் வாக்களிப்பு இல்லாமலே எம். பிக்கள் ஏகமனதாகத் தெரிவாகிவிடுவர் என்ற சூழ்ச்சி!

தமிழ் அரசியல்வாதிகள் எத்துணை பதவி ஆசைபிடித்தவர்கள், கொள்கைப் பிடிப்பில்லாதவர்கள் என்பதை ரணில் வெகு இலகுவாக இனங்கண்டிருக்கிறார். ஆனால் குமாரும் அவரோடு சேர்ந்து கூட்டணியினரும் ரணிலின் சூழ்ச்சிக்கு முட்டுக்கட்டை போட்டுவிட்டனர். புத்தளத்தில் வதியும் யாழ். முஸ்லிம் பக்களின் வாக்குகளைப் பெறும் நோக்குடன் முஸ்லிம் காங்கிரஸ் யாழ். மாவட்டத்துக்கு வேட்புமனுத் தாக்கல் செய்துவிட்டதால் இனி ஏகமனதாக எம். பிக்களை தெரிவு செய்யும் நிலை ஏற்படாது.

கப்பலில் கடல் தாண்டி வந்து தெல்லிப்பளையில் வேட்பு மனுத் தாக்கல் செய்வதும், தீவுப் பகுதியில் வாழும் ஆறாயிரம் பேரிடம் வாக்கு வேட்டைக்குச் செல்வதும் கடினம், சிரமம் எனக் கருதி யாழ்ப்பாணத்தில் போட்டியிட கூட்டணி விரும்பவில்லை. அதனால் இங்கு தேர்தல் நடத்தக் கூடாது என்று, (சில காரணங்களை முன்வைத்துப்) வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

வழக்குத் தீர்ப்பு எப்படி அமையினும் யாழ்ப்பாணத்திலும் பொதுவாக வடக்கிலும் உரிய விதிப்படி தேர்தலை நடத்த முடியாமல் அரசு திண்டாடுவதும், அடாவடித்தனமான தேர்தலை நடத்த முனைவதும் வடக்குக்குத் தனியான பிரதேசம் என்பதையே நிலை நிறுத்துகின்றன. ஸ்ரீலங்கா அரசின் ஆணையும், அதிகாரமும் செல்லுபடியாகாதவாறு, அங்கு தமிழர் ஆட்சி, தனி ஆட்சி நடக்கிறது என்பதும் ஊர்ஜிதமாகிறது! ★

உதயகாந்தன்

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

## ஆலயங்களில்

தொல்புரம் துரையன் வளவுப் பிள்ளையார் கோயில் மணவாளக் கோல நவோத்தர சத சங்காபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை முதல் நடைபெற்று இரவு சுவாமி வீதியுலா நடைபெறும். இரவு 7 மணிக்கு ஆசிரியர் திரு.த சிவகுமாரன் சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (ஏ-28)

★ ★ ★

அல்வாய் மாறாம்புலம் மாணிக்கப் பிள்ளையார் கோயில் மகா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் நடைபெறும். (ஒ-173)

★ ★ ★

யாழ்ப்பாணம் கச்சேரி - நல்லூர் வீதியிலுள்ள புனித ஆசிர்வாதப்பர் ஆலய திருவிழாவிற்கான ஆயத்த நற்கருணைவழிபாடு இன்றுமாலை 6 மணிக்கும் திருநாள் திருப்பலி நாளை திங்கள் காலை 6.45 மணிக்கும் நடைபெறும். திருப்பலியின் முடிவில் திருச்சுருபப் பவனி இடம் பெறும்.

## புலிகளின் குரல் வானொலியில்

10-07-1994
ஞாயிறு இரவு

★ 8.01 — சிறப்பு நிகழ்ச்சி — "ஜூலை பதிந்த வரலாறு"
★ 8.20 — தாயகப் பாடல்கள்
★ 8.30 — செய்திகள்
★ 8.40 — தொடர் நாடகம் — இலங்கைமன் 31 ஆம் அங்கம்

11-07-1994
திங்கள் காலை

★ 7.02 — மாவீரர் வணக்கம்
★ 7.15 — மணியரம்
★ 7.30 — செய்திகள்
★ 7.35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7.40 — தாயகப் பாடல்கள்

## கவிதை, சிறுகதை போட்டி முடிவுகள்

விக்டோரியா, ஜூலை 10

அவுஸ்திரேலிய விக்டோரியா இலங்கைத் தமிழ்ச் சங்கத்தின் இரண்டாவது முத்தமிழ் விழாவை ஒட்டி நடைபெற்ற அகில உலகரீதியான கவிதை, சிறுகதைப் போட்டிகளில் சிறுகதைப் போட்டியில் முதலாவது பரிசை திருமதி ஸ்ரீசிவகௌரி (விக்டோரியா), இரண்டாவது பரிசை திரு. துரைச்சாமி சுப்பிரமணியம் (யாழ்ப்பாணம்), மூன்றாவது பரிசை திருமதி புவனா இராஜரெட்ணம் (விக்டோரியா) ஆகியோரின் சிறுகதைகள் பெற்றுக்கொண்டன.

கவிதைப் போட்டியில் திரு. வே. ரி. ஞானப்பிரகாசம் (கொடிகாமம்), திரு. செ. குணரெத்தினம் (மட்டக்களப்பு), எம் விக்டர் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் கவிதைகள் [illegible] இடங்களையும் பெற்றன. (…)

## வேட்பாளர் பட்டியலை ஏற்க அரச அதிகாரி
### தெல்லிப்பழையில் தங்கி உள்ளார்

கொழும்பு, ஜூலை 10

எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ் மாவட்டத்துக்கான வேட்பாளர் பட்டியல்களை ஏற்றுக் கொள்வதற்காக இணைந்த அரச சேவைகள் பிரிவின் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ. டி. எம். பெரேரா தெல்லிப்பழைக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வேட்புமனு தாக்கல் செய்யும் இறுதிநாள் வரை இவர் தெல்லிப்பழை செயலகத்தில் தங்கியிருப்பார் என்று தஜலண்ட் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவம் தனது கட்டுப்பாட்டில் உள்ள தீவுப் பகுதிகள் மன்னார்த் தீவு வன்னி ஆகிய பிரதேசங்களில் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருப்பதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [இ-எ]

## மரக்கறி விலை வீழ்ச்சி

குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

சந்தைகளில் கத்தரிக்காய் கிலோ 3 ரூபாவில் இருந்து 5 ரூபா வரை விற்கப்படுகிறது (ஒ-17)

## வாழ்வளிப்போம் வாருங்கள்

எம் உடன் பிறப்புக்களாகிய விழிப்புல வலுவிழந்தோரினது வாழ்வின் வளத்திற்கு நாம் உதவுவோம்.

எமது அருமைக் குழந்தைச் செல்வங்களின் பிறந்த தினங்களையும் எமக்கு இனியவர்களாக எம் மத்தியில் வாழ்ந்து வானுலகுற்றவர்களின் நினைவு நாள்களையும் விழிப்புல வலுவிழந்தோருக்கு உதவும் வகையில் கொண்டாடுவோம். இதனால் அமரர்களுக்கு ஆத்ம சாந்தியும் எமக்கு மனச்சாந்தியும் கிடைக்கும்.

நன்றி.

தொடர்பாடல்: தங்கள் ஆதரவை நாடும்
நிர்வாகி வாழ்வகத்தோர்
விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம்,
மருதனார்மடம்,
உடுவில். (7518)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் சிவகுரு
(ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி)

சாவகச்சேரி தேவாலய வீதியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி ஆ. சிவகுரு 8-7-94 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் பாக்கியரத்தினத்தின் அன்புக் கணவரும், Dr நரேந்திரன் (U.K.), தர்மேந்திரன் (தொழில்நுட்ப அதிகாரி நீர்ப்பாசனத்திணைக்களம்), சுரேந்திரன் (நீதிபதி கிளிநொச்சி), மகேந்திரன் (விரிவுரையாளர், விவசாயபீடம், கிளிநொச்சி), ஜானகி (பல்கலைக்கழகக் கல்லூரி, வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10-7-94 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. தர்மேந்திரன்
(மகன்)

தேவாலய வீதி,
சாவகச்சேரி. (31833)

## சிங்காரவேலு பாலசுப்பிரமணியம்

நல்லூர், அரச வீதி இலக்கம் 3ஐச் சேர்ந்த சிங்காரவேலு பாலசுப்பிரமணியம் அவர்கள் 09 07-94 சனிக்கிழமை காலமானார்.

இவர் விஜயவனிதாவின் அன்புக்கணவரும் லதன், வினோஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ் சென்றவர்களான சிங்காரவேலு, காமாட்சியம்மாள் ஆகியோரின் மூத்த மகனும், குமாரசாமி கமலாவதி ஆகியோரின் அன்பு மருமகனும், ஜெயமணி, நாகேஸ்வரி, நவரத்தினம் (ஜேர்மனி), யோகநாதன், ஆனந்தராசா (கனடா), கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தங்கவேல், பாலகிருஷ்ணன், பரமசிவம் (கனடா), இராசராசேஸ்வரி, ஜெயந்தி (கனடா), காளிதாஸ், உதயணன் (லண்டன்), சிவனேஸ்வரநாதன் (சவூதி அரேபியா), மதுரகுமார், சிவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், மகேஸ்வரி, வசந்தா ஆகியோரின் மனைவி வழியான சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10 - 07 - 1994) ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்;
சி. யோகநாதன்
(சகோதரன்)

நல்லூர்,
இல 8, அரச வீதி,
யாழ்ப்பாணம். [31844]

## திருமதி மனோன்மணி நடராசா

ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகக் கொண்ட மனோன்மணி நடராசா 09-07-1994 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், விஜயேஸ்வரி, விமலேஸ்வரி, விக்னேஸ்வரி, மங்களேஸ்வரி, சிறிகணேச இளங்கோவன், சிறிபால இளங்கோவன் ஆகியோரின் அன்புத் தாயாரும், நவரட்ணம், சிறீதரன், ஞானந்தன், ஜகதாஸ், சத்தியபாலன், இந்திரா ஆகியோரின் மாமியாரும், ந. நர்மதன் (கனடா), ந. நாமதி (யாழ் வேம்படி மகளிர் கல்லூரி), ந. ராகுலன் (J/Central College) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (10-07-94) முற்பகல் 11-00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக காக்கைதீவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
நவரட்ணம் (மருமகன்).

ஆலடி ஞான வைரவ கோயில்,
ஆனைக்கோட்டை. [31841]

## A. D. சுப்பிரமணியம்

இளைப்பாறிய தலைமை ஆசிரியரும் காப்புறுதிக் கூட்டுத்தாபன முகவரும் காலம்சென்ற திருமதி ஜெஸ் தங்கம்மாவின் அன்புக்கணவரும் கரவெட்டி கிழக்கில் வசித்தவருமான A. D. சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (9. 7. 94) இறைவனடி சேர்ந்து விட்டார்.

நல்லடக்க ஆராதனை இன்று (10. 7. 94) பி. ப 4 00 மணிக்கு கரவெட்டி கிழக்கில் நடைபெறும்.

தகவல்:
திரு. சு. சா. பூரணம்பிள்ளை
(மகன்)

ஜெஸ் இல்லம்
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. (31847)

## தியாகராசா அன்னலட்சுமி
(மண்டைதீவு)

மண்டைதீவு 1ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தியாகராசா அன்னலட்சுமி காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசா (கொக்குவில்) வின் அன்பு மனைவியும், மண்டைதீவு காலஞ்சென்ற குழந்தை - தெய்வானையின் அன்பு மகளும், கனகரத்தினம் (கரியாலை நாகபடுவான்), காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, கனகசபை, திருமதி செல்லையா தில்லைவனம், சின்னையா சுந்தரம் ஆகியோரின் சகோதரியும், கனகதேவி, சரோஜினிதேவி, சிதம்பரராணி ஆகியோரின் அருமைத்தாயாரும், நவரத்தினம், கிருபா ஆகியோரின் அன்பு மாமியும், தனரூபன், தினேஸ்குமாரி, ரோஜினி, கார்த்தீபன், காவலியா, கீர்த்தனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, தகனக்கிரியைகள் கீரிமலை மயானத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கா. நவரத்தினம்

[31855]

# ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்
கொக்குவில்

## அலங்கார உற்சவம் - 1994

10 - 07 - 1994 தொடக்கம் 19 - 07 - 1994 வரை

★ **10 - 07 - 1994:**
காலை 8 00 மணிக்கு நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகம் (1009)
மாலை 4 00 மணிக்கு விசேஷ பூசையும் அம்பாள் வீதிவலம் வருதலும்.

★ **11 - 07 - 1994 — 19 - 07 - 1994:**
பி. ப. 2.30 மணிக்கு அபிஷேகமும்
மாலை 4.00 மணிக்கு விசேஷ பூசையும் அம்பாள் வீதிவலம் வருதலும்

தினமும் மாலை 6 45 மணிக்கு 'சிவநெறித்தொண்டன்' திரு. செ. சத்தியமூர்த்தி அவர்கள் ''திருவிளையாடற் புராணம்'' தொடர் விரிவுரை நடத்துவார்.

பரிபாலனசபை

[31854]

# சுதுமலை ஈஞ்சடியம்பதி ஞான வயிரவர் தேவஸ்தான

## 4 ஆம் திருவிழா விஞ்ஞாபனம்

11-7-94 திங்கட்கிழமை

காலை: 10.00 மணிக்கு - விசேஷ அபிஷேக ஆராதனை

இரவு: 6 30 மணிக்கு - நாதஸ்வரக் கச்சேரியும், தவில் கச்சேரியும் அதனைத் தொடர்ந்து ஆலய முன்றிலில் பக்தி பூர்வமான தீக்குளிப்பு வைபவமும் இடம் பெறும்.

இரவு: 9 00 மணிக்கு - வழக்காடு மன்றம்.

### "குற்றக் கூண்டில் இராமன்"

நடுவர்: இ. ஜெயராஜ்
(அமைப்பாளர் அகில இலங்கை கம்பன் கழகம்)

இதனைத் தொடர்ந்து ஈழத்தின் முன்னணி இசை அமைப்பாளர்களில் ஒருவரும் நவீன இசைக் கருவியைக் கையாள்வதில் முன்னோடிகளுமான யாழோசை கண்ணன் குழுவினருடன் இன்னிசை இரவுக் நிகழ்ச்சி இடம்பெறும்.

4 ஆம் திருவிழா உபயகாரர்

[31850]

# மெதடிஸ்த திருச்சபை
## முதியோர் இல்லம்

பின்வரும் பொறுப்புகளுக்கு சேவை மனப்பான்மையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ✲ இல்லப் பொறுப்பாளர் (Warden)
- ✲ பராமரிப்பாளர் (Care Staff)
- ✲ உணவு தயாரிப்பாளர் (Cook)
- ✲ உதவியாளர் (Handyman)

நிபந்தனைகள்:

இல்லத்தில் தங்குதல் அவசியம்.

இல்லப் பொறுப்பாளர் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்தவராயிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் கீழ்வரும் விலாசத்துக்கு 20 - 07 - 1994 க்கு முன்னதாக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

ஏற்கனவே விண்ணப்பித்தவர்களும் மீள விண்ணப்பிக்கும்படி கேட்கப்படுகிறார்கள்.

முகாமைக்குழு
மெதடிஸ்த திருச்சபை

லொக்வுட் இல்லம்,
9, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம். (சி/8626)

# நன்றி நவிலல்

## அமரர் எம். ஏ. கந்தையா
(சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி முன்னாள் ஆசிரியர்)

சித்திரைத் திங்கள் சனிப்பிரதோஷமும் திரயோதசி திதியும் கூடிய 24 4-94 இல் இறையடி எய்திய எமது தருமைக் கணவரும், எமது அன்புத் தந்தையும், பாசமிகு மாமாவும், ஆருயிர்ப் பேரனுமாகிய எம். ஏ. கந்தையா அவர்களின் இறுதிச் சடங்கில் நேரில் கலந்தும் அனுதாபம் தெரிவித்தும், இரங்கலுரை நிகழ்த்தியும், கடிதங்கள், தந்திகள் மூலம் அனுதாபம் தெரிவித்தும் அன்னாரின் அன்பு மருமகனின் இல்லத்திற்கு சென்று கலங்கியும் காரைநகரிலுள்ள அன்னாரின் இல்லத்தில் கூடி கண்ணீர் அஞ்சலி செலுத்தியும் எமது துன்பத்தில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அமரரின் பழைய மாணவர்களுக்கும் எமது நன்றியைப் பணிவன்புடன் தெரிவிக்கின்றோம்.

மேலும் பத்திரிகைகள் மூலம் அஞ்சலி செலுத்தியும் செய்திகள் பிரசுரித்தும், அன்னாரைக் கௌரவித்தோர்க்கும், விசேடமாக சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர் சங்கம், பழைய மாணவர் சங்கக் கிளைகள் என்பவற்றுக்கும் எமது உணர்வுபூர்வமான நன்றியறிதலைப் பணிவுடன் தெரிவிக்கிறோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் பங்கு கொண்ட அனைத்து அன்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கிறோம்.

ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்!

133/2, கடற்கரை வீதி,
நீர்கொழும்பு.

(31852)

## விளையாட்டு நிகழ்வுகள்

டொனால்ட் கணேசகுமார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இரண்டாவது அரை இறுதி ஆட்டம் இன்று முற்பகல் 9 00 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இந்த ஆட்டத்தில் கொக்குவில் சி. சி. சி. அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி மோதும். (ஐ)

## மகரயாழ்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவு சம்பந்தமான கழகக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தாம் சார்ந்த துறையினூடு, தியாக உணர்ச்சியோடும், இனப் பற்றோடும், மனிதாபிமானத்தோடும் இம் மண்ணுக்கு தொண்டாற்றி, இளைய தலைமுறைக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவருக்கே இவ்விருதை எமது கழகம் வழங்குவது வழக்கமான போதும், விதிவிலக்காக இம்முறை இவ்விருது மறைந்த ஒருவருக்கு வழங்கப்படுகிறது.

விருதிற்கான மக்கள் அபிப்பிராயம் கோரப்பட்ட வேளையில், வாழ்ந்து கொண்டிருந்த பேராசிரியவர்களுக்கே இவ்விருதை வழங்க வேண்டுமென பெரும்பான்மையானோர் சிபாரிசு செய்தமையினால் கழக அறிஞர் குழு வழமையான நிபந்தனையை மீறி, பேராசிரியர் அவர்களின் மறைவுக்குப் பிந்தியதாக இவ்விருதை அவருக்கு வழங்குவது பொருத்தமென நீண்டநேர சர்ச்சையின் பின் முடிவு செய்தது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி என்பவற்றின் பழைய மாணவரான இவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்று 1957 இல் பொறியியல் பட்டதாரியானார். பட்ட மேற்படிப்பினை கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து 1962 இல் டாக்டர் பட்டத்தினைப் பெற்றார்.

1962 முதல் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும், பீடாதிபதியாகவும், இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தில் பொறியியல் பேராசிரியராகவும் பணியாற்றி பல சிறந்த பொறியியல் வல்லுநர்களை உருவாக்கியவரானார். கனடாவிலுள்ள பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் அதிதிநிலைப் பேராசிரியராகவும் (Visiting Professor) கடமையாற்றியுள்ளார்.

அமரர் பேராசிரியர் துரைராசா அவர்கள் தான் பெற்றிருந்த கல்வித் தகைமையினால் உலகின் எப்பகுதியிலும் பெருமையுடனும், இங்குள்ளதைவிடப் பன்மடங்கு வசதியுடனும் வாழ முடிந்திருந்தும் தன் தாய் மண்ணுக்காக அனைத்தையும் துறந்து, அடிப்படை வசதிகள் கூட அருகிய இந்த மண்ணில் முழு மனதுடன் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

1988 இல் மிகச் சிக்கலான காலகட்டத்தில் யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பொறுப்பேற்று சுமார் 6 வருடங்கள் பல்கலைக் கழகத்தைச் சிறப்பாக வழிநடத்தியதுடன், பல்கலைக் கழகத்தினூடு சமூகத்திற்கும் அரும்பணியாற்றினார்.

இங்கு தான் வகித்த பதவியினூடு பெறக்கூடிய வசதிகளைக் கூட ஏற்க மறுத்த ஓர் சாமானிய மனிதன் பெறக்கூடிய வசதிகளை மாத்திரமே அனுபவித்து வாழ்ந்து காட்டியமை வருங்காலச் சந்ததியினருக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து இம் மண்ணை வியக்க வைத்தது.

பேராசிரியரவர்கள் பதவி மாற்றம் பெற்றுச் சென்ற போதும், அவரது மறைவின் போது மக்கள் காட்டிய உணர்ச்சி வெளிப்பாடு, இம் மண்ணிலே அவர் எவ்வளவு தூரம் பதிந்திருந்தார் என்பதை நன்கு எடுத்துக் காட்டியது.

தேசியத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் பேராசிரியர் அவர்களைக் கௌரவித்தமை அவர் தம் சேவைக்குக் கிடைத்த அதியுயர் சிறப்பாகும்.

இத்தகைய சான்றோருக்கு அவரது மறைவுக்குப் பிந்திய நிலையிலும் இவ்வாண்டுக்கான மகரயாழ் விருதை வழங்கிக் கௌரவிப்பதில் எமது கழகம் பெருமகிழ்வெய்துகிறது — என்று தெரிவிக்கப்பட்டது. (அ-க)

## வடகொரிய ஜனாதிபதி...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொரிய தீபகற்பத்தில் வெகுகாலமாகத் தீர்மானிக்கப்படாதுள்ள அணு ஆயுதப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஜெனிவாவில் அமெரிக்க — கொரிய பேச்சுவார்த்தைகள் தொடங்கிய சிலமணி நேரத்தில் கிம் இல் சுங்கின் மரணம் பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டது.

கிம் இல் சுங்கின் மரணம் பற்றி அறிந்ததும் வடகொரிய மக்கள் ஆழ்ந்த கவலையுடன் கண்ணீர் சிந்திய வண்ணம் இருந்தார்கள் — என்று நிருபர்கள் அறிவிக்கின்றனர்.

# முக்கிய அறிவித்தல்

## வலி. கிழக்கு வர்த்தகர் சங்கம்
(கோப்பாய் வட்டப் பிரிவு)

## வருடாந்த பொதுக்கூட்டம் பிற்போடல்

10-07-1994 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை [இன்று] பிற்பகல் 3. 00 மணிக்கு நடைபெறவிருந்த வருடாந்த பொதுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் 30-07 1994 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு பிற்போடப் பட்டுள்ளதென்பதை அனைத்து வர்த்தகர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

த. பரராசசிங்கம் — தலைவர்
அ. நாகேஸ்வரன் — செயலாளர்

(31849)


# யாழ் ஸ்ரீதரில்...

தினசரி 4-00 மணிக் காட்சியாக

## உயிராயுதம்

தினசரி மாலை 6-00 மணி சனி, ஞாயிறு காலை 10-30, மாலை 6-00 மணி காட்சியாக

## JURASSIC PARK

இன்று பிற்பகல் 2-30 மணிக்கு மட்டும்

## மே-94 ஒளிவீச்சு

(சி-8715)



JAFFNA COLLEGE 1823 1872 CEYLON

# யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டதாரிப் பிரிவு
யாழ்ப்பாணம்

விஞ்ஞான கணித பயிலுநர் ஆசிரியர் எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. (முழுக்கட்டணம் ரூ 200) சேர விரும்புபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

## யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டதாரிப் பிரிவு
464, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம். (சி/8624)


# மரண அறிவித்தல்கள்

## வி. சிவஞானசுந்தரம்
(ஓய்வு பெற்ற பிரதம கணக்காளர், சக்கடத்தார் வீரபத்திரர் கோயில், தர்மகர்த்தா)

சாவகச்சேரி, கோயிற்குடியிருப்பைச் சேர்ந்த காலஞ்சென்ற விசுவலிங்கம் தம்பதிகளின் புதல்வர் சிவஞானசுந்தரம் அவர்கள் நேற்று (9 - 7 - 94) சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் மகாலட்சுமியின் அன்புக் கணவரும், லலிதா, சிவகுமார் (பிரதம பொறியியலாளர், கட்டிடத் திணைக்களம் கொழும்பு, தற்போது U. K), கலாநிதி சுரேந்திரகுமார் (லீட்ஸ் பல்கலைக்கழகம், U. K), சுந்தரலட்சுமி (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசுப்பிரமணியம் (பிரதம லிகிதர், பிரதேச சபை, கண்டாவளை), கமலசாந்தி (U K), கௌரி (U. K), சூரியபாலன் (Accountant கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் ஷர்மிளி, றொசாலி, முகுந்தினி, நிசாந்தினி, உருத்திரன், பிறவின், வீணா, அருணன் ஆகியோரின் அன்புப் பேரனும், மீனாட்சிப்பிள்ளை, தில்லைநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
லலிதா பாலசுப்பிரமணியம்

வீரபத்திரர் கோவில் வீதி,
சாவகச்சேரி. (31856)

## அன்ரனி பிரான்சிஸ் சேவியர்

அன்ரனி பிரான்சிஸ் சேவியர் (Retired Tally Clerk - K.K.S. Harbour) அவர்கள் 04 - 07 - 1994 அன்று காலமாகிவிட்டார்.

இவர் றோசலீனின் அன்புக் கணவரும், அன்ரன் புஸ்பராஜாவின் (ராஜன் - France) அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10-07-1994) பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புனித மரியாள் பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் புனித லொரஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
திருமதி சியாமிளா ஞானசீலன்
(பேறாமகள்)

781, கடற்கரை வீதி,
பாசையூர்,
யாழ்ப்பாணம். (31853)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 393/3 இல் அமைந்துள்ள அச்சகத்தில் 10-07-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org